بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 5

இதழ் 43

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

4 ரபீவுல் அவ்வல் 1442 ஹிஜ்ரி கமரி ★ 22 இகா 1399 ஹிஜ்ரி ஷம்ஸி ★ 22 அக்டோபர் 2020


**அல்லாஹ்வின் கட்டளை**

اَفَلَا یَتَدَبَّرُوۡنَ الۡقُرۡاٰنَ ؕ وَلَوۡ کَانَ مِنۡ عِنۡدِ غَیۡرِ اللّٰہِ لَوَجَدُوۡا فِیۡہِ اخۡتِلَافًا کَثِیۡرًا

(அந்நிஸா : 83)

அவர்கள் குர்ஆனை ஆழ்ந்து சிந்திக்க வேண்டாமா? இது அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து வந்ததாக இருப்பின், நிச்சயமாக அவர்கள் இதில் பல முரண்பாடுகளைக் கண்டிருப்பர்.

**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

## சோதனைக்குரிய வாழ்வாதாரம் மனிதனை இறைவனை விட்டும் தூர விலக்கிக் கொண்டே செல்லும். எதுவரையென்றால், அது அவனை நாசமாக்கி விடும்.

**வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் வழிகாட்டல்கள்**

### ஆன்மீக ஆற்றல்களின் மீது வணக்கத்திற்குரியவனின் தாக்கம்

மனிதனின் ஆன்மீக ஆற்றல்களின் மீது அவனுடைய வணக்கத்திற்குரியவனுக்கு மாபெரும் தாக்கம் இருக்கிறது. பாருங்கள். ஓர் இந்து வந்தால் தூரத்திலிருந்தே கவனக் குறைவின் வாடை வீசுகின்றது. ஏன்? ஏனெனில் அவனால் உருவாக்கப்பட்ட வணக்கத்திற்குரியவனும் அவ்வாறே கவனக் குறைவுள்ளவனாக இருக்கிறான். ஓர் ஆங்கிலேயரின் மணியோசையைப் போன்று மணியோசை கேட்காவிட்டால் அது விழித்தெழுவதேயில்லை. இதன் காரணமாகத்தான் ஆன்மீக வாழ்வினால் கிடைக்கும் இறை ஞானமும், உடல் நலமும் கிடைப்பதில்லை. அதிலிருந்து இவர்கள் விலகி இருக்கிறார்கள். மற்றபடி, பௌதீகமான அளவில் இவர்கள் மிகவும் செல்வந்தவர்களாகவும், வசதியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

### சோதனைக்கான வாழ்வாதாரமும் தூய வாழ்வாதாரமும்

உண்மை என்னவென்றால், வாழ்வாதாரம் இரு வகைப்படும். ஒன்று, சோதனைக்குரியது; இன்னொன்று, தூய வாழ்வாதாரத்தைக் கொண்டது. சோதனைக்குரிய வாழ்வாதாரத்தைப் பொறுத்தவரை அதற்கு இறைவனுடன் எந்தத் தொடர்பும் இல்லை. மாறாக, இந்த வாழ்வாதாரம் மனிதனை இறைவனை விட்டும் வெகுதூரம் விலக்கிக் கொண்டே செல்லும். எதுவரை என்றால் அது அவனை நாசமாக்கி விடும். இதன் பக்கம் சைகை காட்டியவாறே تُلۡهِكُمۡ اَمۡوَالُكُمۡ என்று அல்லாஹ் கூறினான். (முனாஃபிகூன்:10) உங்களுடைய செல்வம் உங்களை நாசமாக்கி விட வேண்டாம். எவர் இறைவனுக்காக ஆகி விடுகிறாரோ அவரே வாழ்வாதாரத்திற்கும் பரிசுத்தத்திற்கும் உரியவராகிறார். அத்தகைய மக்களுக்கு இறைவன் காப்பாளனாகி விடுகிறான். அவர்கள் தம்மிடம் இருப்பதை இறைவனுக்குரியதாகவே கருதுகின்றனர். மேலும் தனது செயல்களால் அதை நிரூபித்துக் காட்டுகின்றனர்.

நபித்தோழர்களின் நிலைமையைப் பாருங்கள்! ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் முதன் முதலில் போர்வையைப் போர்த்தியவர்களாக வந்து விட்டார்கள். பிறகு அந்தப் போர்வைக்கு அல்லாஹ் எத்தகைய நற்கூலியை வழங்கினான். எல்லாரையும் விட அவர்கள் முதல் கலீஃபாவாக ஆனார்கள். சுருக்கமாக, உண்மையான மேன்மை, நன்மை, ஆன்மீக இன்பத்தால் திழைப்பதற்கு இறை வழியில் செலவிடப்படும் செல்வமே ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 194–195 காதியான் பதிப்பு 2018)

## நபிமொழிகள்

- ★ சலாம் கொடுப்பதற்கு முன் சஜ்தா சஹ்வு.
- ★ சஜ்தாவில் முழுங்கை நிலத்தில் படக்கூடாது.

**ஹதீஸ் எண்: 807**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மாலிக் அவர்களிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொழும் போது அன்னாரின் இரு கைகளையும் தனியாக வைப்பார்கள். எதுவரை என்றால் அன்னாரின் அக்குள்களின் வெண் நிறம் தென்பட்டது.

**ஹதீஸ் எண்: 822**

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் அறிவித்தார்கள்: சஜ்தா செய்யும்போது நடுநிலையைக் கைக்கொள்ளுங்கள். நாய் தன் கால்களை விரிப்பது போன்று உங்களில் எவரும் உங்களின் கைகளை விரிக்காதீர்கள்.

**ஹதீஸ் எண்: 829**

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் பஹீனா அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களுக்கு ளுஹர் தொழுயைத் தொழ வைத்தார்கள். மேலும் அவர்கள் முதல் இரண்டு ரக்அத்துகளில் (நடு இருப்பில் உட்காராமல்) எழுந்து விட்டார்கள். மக்களும் அன்னாருடன் எழுந்து விட்டனர். அவர்கள் தொழுது முடித்ததும் சலாம் கொடுப்பார்கள் என மக்கள் எதிர்பார்த்திருந்தனர். அன்னார் உட்கார்ந்திருந்த அந்த நிலையிலேயே அல்லாஹு அக்பர் கூறினார்கள். சலாம் கொடுப்பதற்கு முன் இரண்டு சஜ்தா செய்தார்கள். பிறகு அன்னார் சலாம் கொடுத்தார்கள்.

(சஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுல் அஸான் காதியான் பதிப்பு 2001)


பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

மக்காவிலுள்ளவர்கள் பிலால் (ரலி) அவர்களின் கால்களில் கயிற்றைக் கட்டி தெருக்களில் இழுத்துச் சென்றனர். மக்காவின் தெருக்களும், மக்காவின் களங்களும் பிலாலுக்கு சாந்தியளிக்கும் இடமாக இருக்கவில்லை. மாறாக, வேதனையும், அவமானமும், பரிகாசிக்கும் இடமாகவும் இருந்தது.

மக்கா வெற்றியடைந்தபோது ஹஸ்ரத் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் கையில் கொடியைக் கொடுத்து, மக்காவின் தலைவர்களே! நீங்கள் உங்கள் உயிர்களைக் காப்பாற்ற விரும்பினால் பிலாலின் கொடியின் கீழ் வந்து நில்லுங்கள். அதாவது, ஒரு காலத்தில் பிலாலின் நெஞ்சத்தில் மக்காவின் மாபெரும் தலைவர்கள் நடனமாடினர். அது தொடர்பாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: உங்களுடைய உயிர் காப்பாற்றப்பட முடியும் என்றால் பிலாலின் அடிமைத்துவத்தில் வருவதே ஒரு வழியாகும்.

தியாகங்கள் செய்ய வேண்டியது ஏற்படுகிறது. அப்போதுதான் அந்தஸ்து கிடைக்கிறது. இஸ்லாத்தின் அழகிய போதனை என்னவெனில், எவர்கள் தியாகங்கள் செய்கிறார்களோ, துவக்கத்திலிருந்தே நன்றியுணர்வை வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றார்களோ அவர்களின் அந்தஸ்து எந்நிலையிலும் உயர்ந்ததாகும். அவர் ஹப்ஷாவைச் சார்ந்த அடிமையாக இருந்தாலும் அல்லது வேறு எந்த தலைமுறையைச் சார்ந்தவராக இருந்தாலும் சரியே.

இந்த பழிவாங்குதல் யூஸுஃப் நபி (அலை) அவர்களின் பழிவாங்குதலை விட மகத்துவமிக்கதாகும். ஏனெனில் யூஸுஃப் நபி (அலை) அவர்கள் தனது தந்தைக்காக தன் சகோதரர்களை மன்னித்தார். அவர் மன்னித்தது தனது சகோதரர்களையாகும். முஹம்மது (ஸல்) அவர்கள் தனது சிறிய தந்தை மற்றும் தனது சகோதரர்களின் மீது பட்ட காலணிகளின் அடிக்குப் பதிலாக மன்னித்தார்கள். யூஸுஃப் நபியின் மன்னித்தல் இந்த மன்னித்தலுடன் ஒப்பிடுகையில் அதற்கு என்ன மதிப்பு இருக்கிறது!

எந்த தொழுகை(யைத் தொழ) மறந்து விட்டதோ அதை ஞாபகம் வந்ததும் தொழுது கொள்ளுங்கள். ஏனெனில் என்னை நினைவு கூறுவதற்காக தொழுங்கள் என அல்லாஹ் கூறியிருக்கிறான்.

ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிலால் (ரலி) அவர்களிடம் ஆன்மீகக் காட்சியில் வந்தார்கள். மேலும் பிலாலே! நீர் என்ன மறந்து விட்டீர் எனக் கூறினார்கள். எனது மண்ணறையை ஸியாரத் செய்வதற்கு வருவதேயில்லை. பிலால் உடனே எழுந்தார்கள். பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தார்கள். மதீனாவிற்குச் சென்று விட்டார்கள்.

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் காலத்தில் பாங்கு சொன்ன ஹப்ஷாவின் தலைவராகவும் சுவர்க்கத்தைச் சேர்ந்தவர்களில் மகத்தான அந்தஸ்தைப் பெற்றவரும் பத்ர் போரில் கலந்து கொண்ட நபித்தோழருமாகிய ஹஸ்ரத் பிலால் பின் ரவாஹா (ரலி) புகழுக்குரிய பண்புகள் பற்றிய குறிப்புகள்

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **18.09.2020** ஹிஜ்ரி ஷம்ஸி **18 தபூக் 1399** அன்று **டில்ஃபோர்டு இஸ்லாமாபாத்தில் உள்ள முபாரக் பள்ளிவாசலில்** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ -
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ - الرَّحْمٰنِ الرَّحِيْمِ - مٰلِكِ يَوْمِ الدِّيْنِ -
إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ - اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ -
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ -

பத்ர் சஹாபாக்களில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைப் பற்றிய குறிப்பில் சென்ற குத்பாவில் சில பகுதிகள் எஞ்சிவிட்டன. இன்று அதனை நான் எடுத்துக் கூறுவேன்.

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கைபர் போரிலிருந்து திரும்பும்போது இரவு முழுவதும் பயணத்தில் இருந்தார்கள். அவர்களுக்கு உறக்கம் வந்தபோது ஓய்வெடுக்க தங்கினார்கள். மேலும், பிலால் அவர்களிடம், இன்று இரவு தமது தொழுகையின் நேரத்தை நீர் பாதுகாப்பீர் என்றார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள். நமது தொழுகையைப் பாதுகாப்பீராக என்பதன் பொருள், தொழுகையின் நேரத்தைப் பாதுகாப்பீராக. மேலும் ஃபஜ்ர் நேரத்தில் நீர் எழுப்ப வேண்டும் என்பதாகும். இவ்வாறு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறியதனால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் தமது சக்திக்கேற்ப நஃபில் தொழுது கொண்டேயிருந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களும் சஹாபாக்களும் உறங்கி விட்டார்கள். ஃபஜ்ர் நேரம் நெருங்கியதும் ஹஸ்ரத் பிலால் அவர்கள் புலரும் பக்கம் அதாவது சூரியன் உதிக்கும் திசையைப் பார்த்தவாறு தமது வாகனத்தில் சாய்ந்து அமர்ந்து கொண்டார்கள். தமது ஒட்டகத்தில் சாய்ந்திருந்த நிலையில் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் மீது உறக்கம் ஆதிக்கம் கொண்டது. ஆக, பிலால் அவர்களும் விழிக்கவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சஹாபாக்களில் எவரும் விழிக்கவில்லை. எதுவரையென்றால் அவர்கள் மீது சூரியனின் ஒளி பட்டது. அவர்களில் முதலாவதாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எழுந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கவலை கொண்டவர்களாக பிலாலே! பிலாலே! என அழைத்தார்கள். பிலால் அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது தாய் தந்தை உங்கள் மீது அர்ப்பணம்! உங்கள் உயிரை எது தடுத்து வைத்திருந்ததோ அதுவே எனது உயிரையும் தடுத்து வைத்திருந்தது. அதாவது உறக்கத்தின் ஆதிக்கம் என் மீதும் ஏற்பட்டு விட்டது என்றார்கள். புறப்படுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே, அவர்கள் தமது வாகனத்தை சிறிது தூரம் பயணப்படச் செய்தார்கள். பிறகு நபி (ஸல்) அவர்கள் நிறுத்தினார்கள். பிறகு உளூ செய்தார்கள். பிறகு சூரியன் உதித்து சிறிது நேரம் கழித்து பிலாலுக்கு கட்டளையிட்டார்கள். அவர் இகாமத் கூறினார். அவர்கள் அனைவருக்கும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சுபுஹ் தொழ வைத்தார்கள். அவர்கள் தொழுகையை முடித்ததும், எவருக்கு தொழுகை மறந்து விடுகிறதோ அவர் நினைவு வந்ததும் நிறைவேற்றி விட வேண்டும். ஏனென்றால் என்னை நினைவு கூற தொழுகையை நிலைநாட்டுங்கள் என இறைவன் கூறியுள்ளான் என்று கூறினார்கள்.

(சுனன் இப்னி மாஜா கிதாபுஸ் ஸலாத். பாபு மன் நாம் அனிஸ் ஸலாதி அவ்நஸீஹா ஹதீஸ் எண். 697)

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மக்கா வெற்றியின் நாளன்று கானா கஅபாவில் நுழைந்தபோது அவர்களுடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களும் இருந்தார்கள். ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் அறிவிக்கிற்ரார்கள்: ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மக்காவின் வெற்றியின் நாளன்று மக்காவிற்கு வந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் இப்னு தல்ஹா (ரலி) அவர்களை அழைத்தார்கள். அவர்கள் வாயில் கதவைத் திறந்ததும் ஹஸ்ரத் நபி (ஸல்), ஹஸ்ரத் பிலால், ஹஸ்ரத் உஸ்மான் பின் ஸைது, ஹஸ்ரத் உஸ்மான் பின் தல்ஹா ஆகியோர் உள்ளே சென்றார்கள். பிறகு கதவை மூடிக் கொண்டார்கள். அவர்கள் சிறிது நேரம் அதில் தங்கி விட்டு பிறகு வெளியே வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் கூறுகின்றார்கள்: நான் விரைந்து முன் சென்று ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் விசாரித்தேன். அவர்கள், அன்னார் அதாவது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபாவில் தொழுதார்கள் என்று கூறினார்கள். எந்த இடத்தில் தொழுதார்கள் என நான் கேட்டேன். அந்தத் தூண்களுக்கு நடுவில் எனக் கூறினார்கள். அன்னார் எத்தனை ரக்அத்துகள் தொழுதார்கள் என நான் கேட்காமல் விட்டுவிட்டேன் என ஹஸ்ரத் இப்னு உமர் அவர்கள் கூறினார்கள். (சஹீஹுல் புகாரி கிதாபுஸ் ஸலாத். பாபுல் அப்வாப் வல்கலக லில் கஅபா வல் மஸாஜித் ஹதீஸ் எண். 468) ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கானா கஅபாவினுள் எந்த இடத்தில் நின்று தொழுதார்கள் என ஹஸ்ரத் பிலால் அவர்கள் மக்களுக்கு பின்னர் கூறி வந்தார்கள்.

ஹஸ்ரத் இப்னு அபீ மலீகா அறிவிக்கிறார்கள்: மக்கா வெற்றியின் நாளன்று ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கஅபாவின் மேல்தளத்தில் பாங்கு கொடுத்தார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுவுஸ் ஸாலிஸ் பக்கம் 177 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மக்கா வெற்றியின்போது ஹஸ்ரத் பிலால் அவர்களைப் பற்றி கூறுகிறார்கள். ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யான் அவர்களை அழைத்து கொண்டு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சபைக்கு வந்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யானைப் பார்த்து கூறினார்கள். உமது நிலை மிக மோசமாகி விட்டது. இறைவன் ஒருவன் என்ற உறுதி இன்னும் உமக்கு ஏற்படவில்லையா? அபூஸுஃப்யான் கூறினார். எவ்வாறு உறுதி ஏற்படாமல் இருக்கும்? வேறு இறைவன் இருந்திருந்தால் எங்களுக்கு உதவி செய்யாமல் இருக்க முடியாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். உமது நிலை மிக மோசமாகி விட்டது. முஹம்மது அல்லாஹ்வின் தூதர் என்ற உறுதி இன்னும் உமக்கு ஏற்படவில்லையா? இது பற்றிய உறுதி இன்னும் ஏற்டபவில்லை என்றார். ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள், பாக்கியமற்ற ஸுஃப்யானே பைஅத் செய்து விடு. அப்போது உனது மற்றும் உனது சமூகத்தின் உயிர் தப்பிக்கும் என்றார்கள். சரி செய்து விடுகிறேன் என்றார்கள். அங்கு அவர் மேலோட்டமாக அவர்கள் கூறியதன் காரணமாக பைஅத் செய்தார்கள். உள்ளத்தால் பைஅத் செய்யவில்லை. ஆனால் பின்னர் உண்மையான முஸ்லிம் ஆனார்கள். பைஅத் செய்த பிறகு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இப்போது உமது சமுதாயத்திற்கான கோல் இல்லை எனில் உமது சமூகம் நிரந்தர அழிவிற்குள்ளாகி விடும். அப்போது முஹாஜிர்களின் உள்ளம், அவர்களோ மக்காவாசிகளாக இருந்தனர். மக்காவின் கண்ணியம் ஒருமுறை முடிந்து விட்டால் பிறகு மக்காவின் கண்ணியம் எஞ்சியிருக்காது என்ற அச்சத்தில் இருந்தனர். அவர்கள் பெரும் பெரும் அநீதிகளை அனுபவித்தவர்களாக இருந்தும் கூட, எவ்வாறாவது சமாதானம் ஏற்பட வேண்டும் என அவர்கள் துஆ செய்து கொண்டிருந்தனர். ஆனால் அதற்கு நேர் எதிராக அன்ஸார் அதிக ஆக்ரோஷமாக இருந்தனர். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கேளுங்கள் என்றார்கள். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் பெரும் கருணை மற்றும் அருளாளர் ஆவீர். தாங்கள் உங்கள் சமூகத்தின் மீது கருணை காட்டமாட்டீர்களா? பிறகு நான் உங்கள் உறவினர் ஆவேன். சகோதரன் ஆவேன். முஸ்லிம் ஆனதால் ஏதேனும் கண்ணியம் எனக்கும் தரப்பட வேண்டும் என்றார்கள்.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சரி சொல்லுங்கள்; எந்த மனிதர் அபூஸுஃப்யானின் வீட்டில் நுழைந்து விடுவாரோ அவருக்கு அடைக்கலம் வழங்கப்படும் என மக்காவில் அறிவித்து விடுங்கள். அவர் கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! எனது வீடு எவ்வளவு விசாலமானது. அதில் எத்தனை மனிதர் வர முடியும்? எவ்வளவு பெரிய நகரம். அதற்கு எனது வீடு எவ்வாறு போதுமானதாகும்?

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: சரி எந்த மனிதர் கானா கஅபாவில் நுழைந்து விடுவாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அதன் பிறகும் மக்கள் எஞ்சியிருப்பார்கள் என அபூஸுஃப்யான் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சரி எவர் ஆயுதத்தைப் போட்டு விடுவாரோ அவருக்கும் ஏதும் சொல்லப்படமாட்டாது என்று கூறினார்கள். அப்போதும் மக்கள் மிச்சம் இருப்பார்கள் என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், சரி எவர் தம் வீட்டின் கதவை மூடிக் கொள்வாரோ அவருக்கும் அடைக்கலம் வழங்கப்படும். அவர் கூறினார். அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தெருவாசிகள் உள்ளனர். அந்த அப்பாவிகள் கொல்லப்படுவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், மிக நன்று. பிலாலுக்கான ஒரு கொடியை ஆயத்தம் செய்யுங்கள். அபி ருவைஹா (ரலி) ஒரு சஹாபி ஆவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மதீனாவில் முஹாஜிரீன் மற்றும் அன்ஸாருக்கு இடையில் சகோதர பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள். அபி ரவாஹா அவர்களுக்கு பிலால் அவர்களை சகோதரராக்கி இருந்தார்கள். அப்போது பிலால் இருந்தார்களா? இல்லையா? அல்லது வேறு காரணம் இருந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பிலாலின் கொடியைச் செய்தார்கள்.

மேலும் அபி ருவைஹாவிடம் கொடுத்துக் கூறினார்கள்: இது பிலாலின் கொடியாகும். இதனை அவர் எடுத்துக் கொண்டு தெரு வீதியில் நிற்கட்டும். மேலும் எவர் பிலாலின் கொடியின் கீழ் நிற்பாரோ அவருக்கு விடுதலை வழங்கப்படும் என அறிவிப்பு செய்து விடுங்கள். அபூ ஸுஃப்யான் கூறினார். இது போதுமானதாகும். இப்போது மக்கா தப்பித்து விடும். நான் செல்வதற்கு இப்போது எனக்கு அனுமதி தாருங்கள் என்றார். செல்லுங்கள் என நபி (ஸல்) அவர்கள்கூறினார்கள். இப்போது செய்தி கிடைத்தது அல்லது கிடைக்கவில்லை என்ற கேள்விக்கு இடமில்லாதவாறு தலைவர்கள் தமது ஆயுதங்களை போட்டு விட்டிருந்தனர். அபூ ஸுஃப்யான் பதற்றத்துடன் மக்காவிற்குள் நுழைந்தார்கள். மேலும் இவ்வாறு கூறிக் கொண்டே சென்றார்கள். மக்களே! தத்தமது வீடுகளின் கதவுகளை மூடிக் கொள்ளுங்கள். மக்களே! தமது ஆயுதங்களை வீசி விடுங்கள். மக்களே! கானா கஅபாவிற்குச் சென்று விடுங்கள். பிலாலின் கொடி நிறுவப்பட்டுள்ளது. அதன் கீழ் நின்று கொள்ளுங்கள். அத்தருணத்தில் மக்கள் தமது கதவுகளை மூடத் தொடங்கி விட்டனர். சிலர் கானா கஅபாவிற்குள் நுழையத் தொடங்கினார்கள். மக்கள் ஆயுதங்களைக் கொண்டு வந்து வெளியே வீசத் தொடங்கினார்கள். அப்போது இஸ்லாமியப் படை நகரத்திற்குள் நுழைந்தது. மக்கள் பிலாலின் கொடியின் கீழ் ஒன்று கூடியிருந்தனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அனைத்தையும் விட அதிக மகத்துவம் வாய்ந்த விஷயம் என்று ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். அது பிலாலின் கொடியாகும். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பிலாலின் கொடியைச் செய்கிறார்கள். எந்த மனிதர் பிலாலின் கொடியின் கீழ் நிற்பாரோ அவருக்கு அடைக்கலம் வழங்கப்படும் என்று கூறுகிறார்கள். ஆயினும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களே தலைவராக இருந்தார்கள். ஆனால் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு எந்தக் கொடியும் நிறுத்தப்படவில்லை.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு தியாகம் செய்பவர்களில் அபூபக்ர் (ரலி) இருந்தார்கள். ஆனால் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் எந்தக் கொடியும் நிறுத்தப்படவில்லை. அவர்களுக்குப் பிறகு முஸ்லிம் ஆன தலைவர் உமர் (ரலி) ஆவார்கள். ஆனால் உமருக்கும் எந்தக் கொடியும் நிறுத்தப்படவில்லை. அவர்களுக்குப் பிறகு உஸ்மான் ஏற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மருமகன் ஆவார்கள். ஆனால் உஸ்மானுக்கும் எந்தக் கொடியும் நிறுத்தப்படவில்லை. அவர்களுக்குப் பிறகு அலி உள்ளார்கள். அவர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் சகோதரர் ஆவார்கள். மருமகனும் ஆவார்கள். ஆனால் அலி (ரலி) அவர்களுக்கும் எந்தக் கொடியும் நிறுத்தப்படவில்லை.

பிறகு அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் எவ்வாறான மனிதர் என்றால் அவர்களைப் பற்றி ரஸூல் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: அவர் உயிருடன் இருக்கும் வரை முஸ்லிம் சமூகத்தில் கருத்து வேறுபாடு ஏற்படாது. அவர்கள் அவ்வாறான மனிதர் ஆவார்கள். ஆனால் அப்துர் ரஹ்மான் அவர்களுக்கு எந்தக் கொடியும் செய்யப்படவில்லை. பிறகு அப்பாஸ் (ரலி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் சிறிய தந்தை ஆவார்கள். சில சந்தர்ப்பங்களில் அவர்கள் இடையூறு செய்தவர்களாக நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் பேசி விடுவார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கோபப்படமாட்டார்கள். ஆனால், ரஸூல் (ஸல்) அவர்கள் அவருக்கும் எந்தக் கொடியும் செய்யவில்லை. பிறகு அதிகமான தலைவர்களும் உயரிய மனிதர்களும் இருந்தனர். காலித் பின் வலீது அவர்கள் ஒரு தலைவரின் மகன் ஆவார்கள். தாமும் பிரபலமான மனிதர் ஆவார். அவரும் இருந்தார்கள். ஆனால் அவர்களில் எவரொருவருக்கும் கொடி செய்யப்படவில்லை. கொடி செய்யப்படுகிறது என்றால் அது பிலாலுக்காக செய்யப்படுகிறது ஏன்? அதற்கு என்ன காரணம்? இதற்கான காரணம் இதுவாகும். கானா கஅபாவில் தாக்குதல் தொடங்கியதும், அபூபக்ர் பார்த்துக் கொண்டிருந்தார்கள். எவர்கள் கொல்லப்பட இருந்தனரோ அவர்கள், அவரின் சகோதரப் பந்தங்கள் ஆவார்கள். மேலும் அவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அவர்கள் தமது சகோதரர்களை கொலை செய்வார்களா என்ன? அவர்கள் அநீதிகளை மறந்து விட்டனர். இவர்கள் நமது சகோதரர்கள் ஆவார்கள் என்பதை அறிவார்கள் என்பதை தாமே கூறியும் இருந்தார்கள். உமர் (ரலி) அவர்கள் கூறியிருந்தால், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இந்த நிராகரிப்பவர்களைக் கொன்று விடுங்கள் என இவ்வாறு கூறி இருப்பார்கள். ஆயினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், அவர்களை மன்னிக்க நாடினால் நன்றாயிற்று! நமது சகோதரர்கள் மன்னிக்கப்பட்டார்கள் என்றே தமது உள்ளத்தில் கூறியிருப்பார்கள். உஸ்மான் (ரலி) மற்றும் அலி (ரலி) அவர்களும் நமது சகோதரர்கள் மன்னிக்கப்பட்டார்கள் என்றே கூறியிருப்பார்கள். அவர்கள் நம்முடன் கடுமையாக நடந்து கொண்டதால் என்னவாயிற்று. ரஸூல் (ஸல்) அவர்களே, அவர்களை மன்னிக்கும்போது அவர்களில் எனது சிறிய தந்தை இருந்தார்; சகோதரர் இருந்தார். அவர்களில் எனது அன்பிற்குரிய மருமகன் மற்றும் உறவினர்கள் இருந்தனர். நான் அவர்களை மன்னித்து விட்டால் நல்லதே நடந்தது. எனது உறவினர்கள் தப்பித்து விட்டார்கள் என்றே நினைத்திருப்பார்கள். ஒரேயொரு மனிதர் இருந்தார். அவருக்கு மக்காவில் எந்த உறவினர்களும் இருக்கவில்லை. அவருக்கு மக்காவில் எந்த ஆற்றலும் இருக்கவில்லை. அவருக்கு மக்காவில் எந்த நண்பரும் இருக்கவில்லை. மேலும், அவரின் ஆதரவற்ற நிலையில் அவர் மீது எவ்வித அநீதிகள் செய்யப்படுகிறது என்றால் அவ்வாறு அபூபக்ருக்கு நடைபெறவில்லை. அலி (ரலி) அவர்களுக்கு நடைபெறவில்லை. உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நடைபெறவில்லை. உமர் (ரலி) அவர்களுக்கும் நடைபெறவில்லை. மாறாக, ரஸூல் (ஸல்) அவர்கள் மீது செய்யப்படவில்லை. சென்ற வாரம் நான் கூறிய ஓர் அறிவிப்பிலும் இந்த விஷயம் கூறப்பட்டிருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களும் உறவினர்கள் காரணமாக தப்பித்து இருந்தனர். ஆனால் இவ்வாறான அநீதி பிலால் (ரலி) மீது இழைக்கப்பட்டது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அநீதி இழைக்கப்பட்டது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மீதும் அநீதி இழைக்கப்பட்டது என நான் விளக்கமளித்திருந்தேன். இங்கும் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அநீதி அவர்கள் மீது இழைக்கப்படவில்லை என கூறவில்லை. மாறாக பிலால் அவர்கள் மீது இழைக்கப்பட்ட அந்த அநீதி எவர் மீதும் இழைக்கப்படவில்லை எனக் கூறுகின்றனர். பிறகு அவர்கள் அதன் விளக்கத்தை எடுத்துக் கூறுகிறார்கள். அது என்ன அநீதியாக இருந்தது? அந்த அநீதி இதுவாகும். கொதிக்கும் அணலான மணல் மீது வெறும் உடலில் பிலால் கிடத்தப்படுவார். மே மற்றும் ஜூன் மாதத்தில் வெறும் காலில் நடக்க முடியாததை நீங்கள் பார்க்கலாம். அவரை நிர்வாணமாக்கி கொதிக்கும் மணலில் படுக்க வைக்கப்படுவார்கள். பிறகு இளைஞர்கள் ஆணிகளுடைய காலணிகளை அணிந்து அவரின் நெஞ்சில் ஆடுவார்கள். அல்லாஹ்வை அன்றி வேறு இறைவன்; வேறு உள்ளனர் என்று கூறச் சொல்வார்கள். முஹம்மது ரஸூலுல்லாஹ் பொய்யர் எனக் கூறச் சொல்வார்கள். அவர்கள் அதிகமாக பிலால் அவர்களை அடிக்கும்போது தமது ஹப்ஸி மொழியில் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் – அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுவார்கள். அந்த மனிதர், நீங்கள் என் மீது எவ்வளவு அநீதியிழைத்தாலும், இறைவன் ஒருவன் என்பதை நான் கண்ட பிறகு இரண்டு என எவ்வாறு கூறுவேன். மேலும் முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் உண்மையான தூதர் ஆவார்கள் என்பது எனக்கு தெரியும்போது அவரை பொய்யர் என நான் எவ்வாறு கூறுவேன். இவ்வாறு பதில் அளிப்பார்கள். அப்போது அவர்கள் மீண்டும் அடிக்க ஆரம்பிப்பார்கள். வெயில் கால மாதங்களில் உஷ்ணம் இருக்கும். அந்தக் காலங்களில் அவர்கள் இவ்வாறே நடத்தப்படுவார்கள். இதைப்போன்றே குளிர் காலங்களில் அவர்கள் இவ்வாறு செய்வார்கள். அவரின் கால்களில் கயிற்றைக் கட்டி மக்காவின் கரடு முரடான வீதிகளில் இழுத்துச் செல்வார்கள். அவர்களின் உடலில் காயங்கள் ஏற்பட்டு விடும். அதாவது அவர்களின் தோல் புண்ணாகி விடும். அவர்கள் இழுத்துச் சென்றவர்களாக, முஹம்மது (ஸல்) பொய்யர் எனக் கூறும். அல்லாஹ்வையன்றி வேறு இறைவன் இருக்கிறான் எனக்கூறும் என்பார்கள். அவர்கள் கூறுவார்கள். அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்; அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ் எனக் கூறுவார்கள்.

இப்போது இஸ்லாமியப் படை உள்ளே நுழைவதற்கு பத்தாயிரம் எண்ணிக்கையில் வந்துள்ளது. பிலால் அவர்களின் உள்ளத்தில், இன்று எனது நெஞ்சில் ஆடிய அந்தக் காலணிகளுக்கான பழிவாங்கிக் கொள்ளலாம். என்னை அநீதியான முறையில் எவ்வாறு அடிக்கப்பட்டதோ அந்த அடிக்கான பதில் இன்று எனக்கு கிடைத்து விடும் என்ற எண்ணம் வந்திருக்கலாம். ஆனால் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், எவர் அபூஸுஃப்யான் வீட்டில் நுழைந்தாரோ அவருக்கு மன்னிப்பு; எவர் கானா கஅபாவில் நுழைந்தாரோ அவருக்கு மன்னிப்பு; எவர் தமது ஆயுதத்தை போட்டு விட்டாரோ அவருக்கு மன்னிப்பு; எவர் தம் வீட்டின் கதவை மூடிக் கொண்டாரோ அவருக்கு மன்னிப்பு என்று

### திருக்குர்ஆனிலிருந்து...

நயவஞ்சகர்கள் அல்லாஹ்வை ஏமாற்ற நினைக்கின்றனர். ஆனால் அவன் அவர்களுடைய ஏமாற்றுதலுக்கு தண்டனை அளிப்பான். அவர்கள் தொழுகைக்காக நிற்கும்போது சோம்பி நிற்கின்றனர். அவர்கள் மக்களுக்குக் காட்டு(வதற்காக தொழு)கின்றனர். மேலும் அல்லாஹ்வைக் குறைவாகவே நினைவு கூருகின்றனர். **(4:143)**

A. NASIR AHMAD, Melapalayam

கூறியபோது பிலால் அவர்களின் உள்ளத்தில், இவர்கள் தமது அனைத்து சகோதரர்களையும் மன்னிக்கிறார்கள்; நல்லதைச் செய்கிறார்கள். ஆனால் எனது பழிவாங்கல் தடைபட்டு விட்டது என்ற எண்ணம் வந்திருக்கலாம். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள், இன்று நான் மன்னிப்பதினால் ஒரே ஒரு மனிதருக்கு துன்பம் ஏற்படும் என்றால் அவர் பிலால் ஆவார். எவரை நான் மன்னிக்கின்றேனோ அவர் இவரின் சகோதரரும் இல்லை என்பதைப் பார்க்கிறார்கள். எந்தத் துன்பம் அவருக்குத் தரப்பட்டதோ அவ்வாறு வேறு யாருக்கும் தரப்படவில்லை. அதற்கான பழியை நான் வாங்குவேன். மேலும் எனது நுபுவ்வத்தின் மகத்துவம் எஞ்சியிருக்கும் வகையிலும் பிலாலின் உள்ளம் மகிழும் வகையில் பழிவாங்குவேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பிலாலின் கொடியை நிறுவுங்கள். மேலும் மக்காவின் அந்த தலைவர்களை எவர்கள் காலணிகளுடன் அவரின் நெஞ்சில் ஆடினார்களோ, எவர்கள் அவரின் கால்களில் கயிறைக் கட்டி இழுத்தார்களோ, எவர்கள் சுடும் மணலில் அவரை படுக்க வைத்தார்களோ, அவர்கள் தனது மற்றும் தம்முடைய மனைவி மக்களுடைய உயிரைப் பாதுகாக்க விரும்பினால் பிலாலின் கொடியின் கீழ் வந்து விடுங்கள் என்று கூறினார்கள்.

உலகம் எப்போது உருவானதோ மனிதனுக்கு எப்போது ஆற்றல் பெறப்பட்டதோ மேலும் எப்போதிருந்து மனிதன் வேறு மனிதனிடம் தமது இரத்தத்தின் பலியை வாங்க ஆயத்தம் ஆனானோ, மேலும் அவனுக்கு சக்தி கிடைத்ததோ, இந்த வகையில் மிக மகத்தான பலியை எந்த மனிதரும் வாங்கவில்லை என்று நான் நினைக்கிறேன். பிலால் அவர்களின் கொடி எப்போது கானா கஅபாவின் மைதானத்தில் நிறுவப்பட்டதோ, அப்போது அரபின் தலைவர்கள், இவரை தமது கால்களில் நசுக்கி முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பொய்யர் எனச் சொல் என்று கூறிய அந்த தலைவர்கள், இப்போது அவர்கள் ஓடி ஓடி வந்து, தமது மனைவி மக்களைக் கொண்டு வந்து, கொண்டு வந்து பிலால் அவர்களின் கொடியின் கீழ் கொண்டு வந்து விடும்போது இப்போது காட்சிகள் மாறிவிட்டன. நிலைமைகள் மாறிவிட்டன. பிலால் அவர்களின் உள்ளம், அவரின் உயிர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது எவ்வகையில் அர்ப்பணமாகி இருக்கும். நான் அந்த நிராகரிப்பாளர்களை பழிவாங்கவா? அல்லது வேண்டாமா? என்ற செய்தியும் எனக்கு இருக்கவில்லை. அல்லது பழிவாங்க முடியுமா? அல்லது முடியாதா? எனக் கூறியிருக்கலாம். இப்போது அந்தப் பழிவாங்கப்பட்டு விட்டது. அனைத்து மனிதரும் எவரின் காலணிகள் எனது நெஞ்சில் பட்டதோ அவர்களின் தலைகளை எனது காலணியின் மீது குனியச் செய்யப்பட்டது. இது அந்த பழிவாங்கல் ஆகும். நெஞ்சில் ஆடிய காலணிகளாக அது இருந்தது. இன்று அதனை அணிந்தவர்களின் தலைகள் பிலாலின் காலணியின் மீது குனிந்து விட்டது. இது யூசுஃபின் பழிவாங்கலை விட அதிக மேலானதாக இந்தப் பழிவாங்கல் இருந்தது. ஏனென்றால் யூசுஃப் தம் தந்தைக்காக தமது சகோதரர்களை மன்னித்தார். எவருக்காக செய்தாரோ அது அவர் தந்தையாக இருந்தார். எவருக்காக செய்தாரோ அது அவரின் சகோதரர்களாக இருந்தனர். மேலும் முஹம்மது (ஸல்) அவர்கள் தமது சிறிய தந்தைகள் மற்றும் சகோதரர்களை ஓர் அடிமையின் காலணிகள் வாயிலாக மன்னித்தார்கள். இதற்கு எதிரில் யூசுஃபின் பழிவாங்கல் என்ன தகுதியைக் கொண்டதாக இருக்கும்.

(சேரே ரூஹானி கஸாயீன். அன்வாருல் உலூம் தொகுதி 24, பக்கம் 268–273)

இதே சம்பவத்தை தீபாசா தஃப்ஸீருல் குர்ஆனில் சென்ற மேற்கோள் சேரே ரூஹானி உடையதாகும். தீபாசா தஃப்ஸீருல் குர்ஆனில் சுருக்கமான முறையில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. நான் இதைக் கூறுவதற்குக் காரணம், சில மக்கள் இன்ன இடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்கள் என்று எழுதி விடுகிறார்கள். இரண்டு கூற்றுகளிலும் விரிவு மற்றும் சுருக்கம் என்பதை தவிர வேறு வித்தியாசம் இல்லை. சில மக்கள், பெரும் புள்ளியை எடுத்து வித்தியாசத்தை உருவாக்க ஆரம்பித்து விடுகிறார்கள். சம்பவ ரீதியிலும் விளைவு ரீதியிலும் ஒரே விஷயம் தான் உள்ளது. எவ்வாறிருப்பினும் இங்கு கூறப்பட்டடுள்ளவை இவ்வாறாகும்.

அபூ ஸுஃப்யான் அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மக்காவின் மக்கள் வாளை எடுக்கவில்லை என்றால் அவர்கள் பாதுகாப்பில் வந்து விடுவார்களா என்ன? ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஆம். ஒவ்வொரு மனிதரும் எவர் தமது வீட்டின் கதவை மூடிக் கொள்வாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூ ஸுஃப்யான் பெருமையை விரும்பும் மனிதர் ஆவார். இதன் பொருள், எனது கண்ணியத்திற்கான ஏதேனும் ஏற்பாடு செய்யுங்கள் என்பதாகும். இது ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களின் அறிவிப்பில் கூடுதலாக சொல்லப்பட்ட விஷயமாகும்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மிகச் சிறப்பு. எவர் அபூ ஸுஃப்யானின் வீட்டிற்குச் சென்று விடுவாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும். எவர் கஅபா பள்ளிவாயிலில் நுழைந்து விடுவாரோ அவருக்கும் அமைதி வழங்கப்படும். எவர் தமது ஆயுதங்களை வீசி விடுவாரோ அவருக்கும் அமைதி வழங்கப்படும். எவர் தமது கதவுகளை மூடி அமர்ந்து விடுவாரோ அவருக்கும் அமைதி வழங்கப்படும். எவர் ஹக்கீம் பின் ஹஸாமின் வீட்டிற்குச் சென்று விடுவாரோ அவருக்கும் அமைதி வழங்கப்படும். அதன் பிறகு அபி ருவைஹா இவரை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அடிமை பிலாலின் சகோதரராக ஆக்கி இருந்தார்கள்.

இவரைப் பற்றி ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்போது நாம் அபி ருவைஹாவிற்கு தமது கொடியைத் தருகிறோம். எந்த மனிதர் அபி ருவைஹாவின் கொடியின் கீழ் நிற்பாரோ நாம் அவரை ஒன்றும் செய்ய மாட்டோம். மேலும் பிலாலிடம் கூறினார்கள். எந்த மனிதர் அபி ருவைஹாவின் கொடியின் கீழ் வருவாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும் என்ற இந்த அறிவிப்பை நீங்கள் செய்து கொண்டே செல்லுங்கள். இங்கு பிலால் அறிவிப்பு செய்து கொண்டு செல்வது என்ற இந்த விஷயம் கூடுதலாக உள்ளது. இந்தக் கட்டளையில் எவ்வளவு மதிநுட்பம் உள்ளது. மக்காவின் மக்கள் பிலால் அவர்களின் காலில் கயிற்றைக் கட்டி அவரை வீதிகளில் இழுத்துச் செல்லக் கூடியவர்களாக இருந்தனர். பிலால் அவர்களுக்கு மக்காவின் வீதிகள், மக்காவின் மைதானம் அமைதியின் இடமாக இருக்கவில்லை. மாறாக தண்டனை, இழிவு மற்றும் எள்ளிநகையாடலுக்குரிய இடமாக இருந்தது. பிலால் அவர்களின் உள்ளம் இன்று பழிவாங்குவதின் பக்கம் மீண்டும் மீண்டும் செல்லக்கூடும். அந்த நன்றியுணர்வு மிக்க தோழரின் பழிவாங்கலும் மிக அவசியமாகும். ஆயினும் நமது இந்தப் பழிவாங்குதல் இஸ்லாத்தின் மகிமைக்கேற்ப இருப்பது அவசியமாகும் என்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கருதினார்கள். எனவே நபி (ஸல்) அவர்கள் பிலாலின் பழிவாங்கலை வாளின் மூலம் அவரின் எதிரிகளின் கழுத்தை துண்டித்து விடுவது என்ற இந்த முறையில் வாங்கவில்லை. மாறாக அவரின் சகோதரரின் கையை ஒரு கொடியை கொடுத்து நிற்கச் செய்தார்கள். எவர் எனது சகோதரரின் கொடியின் கீழ் வந்து நிற்பாரோ அவருக்கு அமைதி வழங்கப்படும் எனும் இந்த அறிவிப்பை செய்யும் நோக்கத்தில் பிலால் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்தப் பழிவாங்கல் எவ்வளவு மகத்தானதாக இருந்தது. இந்த பழிவாங்கல் எவ்வளவு அழகானதாக இருந்தது. பிலால் உரத்த குரலில், மக்காவாசிகளே! வாருங்கள். எனது

## திருக்குர்ஆனிலிருந்து...

அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நன்மை செய்பவராகி இப்ராஹீமின் நேரான மார்க்கத்தைப் பின்பற்றுகிறவரை விட அழகான மார்க்கத்தையுடையவர் யார்? அல்லாஹ் இப்ராஹீமைத் தன் நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டான். (4:126)

S.S.H. MUHAMMED LEBBAI, Melapalayam

சகோதரரின் கொடியின் கீழ் நின்று கொள்ளுங்கள். உங்களுக்கு அமைதி வழங்கப்படும் என்ற இந்த அறிவிப்பைச் செய்யும்போது அவரின் உள்ளம் சுயமாகவே பழிவாங்கலின் உணர்வை விட்டு விலகி இருக்கும். முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எவ்விதமான பழிவாங்கலை எனக்காக தேர்வு செய்தார்களோ அதை விட மகத்தான அதை விட அழகான பழிவாங்கல் எனக்கு வேறு ஏதும் இருக்க முடியாது என்பதை அவர் உணர்ந்திருப்பார்.

(தீபாச்சா தஃப்ஸீருல் குர்ஆன். அன்வாருல் உலூம் தொகுதி 20, பக்கம் 340–341)

பிறகு ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களின் பொறுமை மற்றும் மக்கா வெற்றியின்போது அவரின் நிலை பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்: இந்த துன்பங்கள் பிலாலுக்கு தரப்பட்டது. மக்காவில் துன்பங்கள் பற்றி முன்னரே கூறப்பட்டு விட்டது. ஆயினும் மக்கா வெற்றி கிடைத்ததும் அந்த அடிமை பிலால் அவரின் நெஞ்சில் மக்காவின் பெரும் பெரும் அதிகாரிகள் ஆடுவார்கள். அவருக்கு ரஸூல் (ஸல்) அவர்கள் என்ன மதிப்பை வழங்கினார்கள். நிராகரிப்பாளர்களிடம் அவரின் பழிவாங்கலை எவ்வாறு வாங்கினார்கள் என்பதை அறிவீர்களா? மக்கா வெற்றி கொள்ளப்பட்டபோது ரஸூல் (ஸல்) அவர்கள் பிலாலின் கையில் ஒரு கொடியைத் தந்தார்கள். மேலும் அறிவிப்பைச் செய்தார்கள். மக்காவின் தலைவர்களே! இப்போது நீங்கள் உங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் பிலாலின் கொடியின் கீழ் வந்து நின்று கொள்ளுங்கள். ஆக எவரின் நெஞ்சில் மக்காவின் பெரும் பெரும் தலைவர்கள் ஆடினார்களோ அந்த பிலால் தொடர்பாக ரஸூல் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளுக்கு கூறினார்கள். இன்று உங்கள் உயிர் தப்பிக்க முடியும் எனில் அதற்கான வழி நீங்கள் பிலாலின் அடிமை ஆகிவிடுங்கள். அவ்வாறிருந்தும் பிலால் அடிமையாக இருந்தார்கள். மேலும் அவர்கள் செல்வாக்கு உடையவர்களாக இருந்தனர்.

(ஆயின்தா ஒஹி கொமே(ன்) இஜ்ஜத் பாயேகீ ஜொ மாலி வஜானீ குர்பானியோமே ஹிஸ்ஸா லேகி தொகுதி 21 பக்கம் 164)

எனவே, அவர்களின் சகோதரரிடம் கொடியை வழங்கி இருந்தாலும் அவருடன் பிலாலை இணைத்தார்கள். அனைத்து இடத்திலும் இந்த விளைவே உள்ளது. பிலாலின் பெயரில் கொடி இருந்தாலும் அப்போதும் பிலாலின் கையில் கொடுத்தார்கள் எனும் போதும் முடிவு ஒன்றாகவே உள்ளது. எனவே சிறு வித்தியாசத்துடன் சம்பவம் என்ற ரீதியில் ஒரே விஷயம் எடுத்துக் கூறப்படுகிறது.மேலும் முடிவும் அதுதான் வெளிப்படுகிறது.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் அவர்களிடமிருந்து அறிவிக்கப்படுகிறது. பெருநாள் அன்று ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஈட்டியைப் பிடித்தவாறு சென்றார்கள். ஈது நாளன்று, ஒரு மனிதர் முன்னால் செல்வார். அவரின் கையில் ஈட்டி இருக்கும். பொதுவாக அதனை பிலால் கொண்டு செல்வார்கள். முஹம்மது பின் உமர் கூறுகிறார்கள். ஹஸ்ரத் பிலால் அதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் ஊன்றி நடுவார்கள். அந்தக் காலத்தில் ஈத்கா மைதானத்தில் இருக்கும். திறந்த மைதானதாக இருக்கும். அதுவே பெருநாள் திடலாக இருக்கும்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுஉஸ் ஸாலிஸ் பக்கம் 177 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2017)

ஓர் அறிவிப்பு உள்ளது. நஜாஷீ ஹப்ஷீ மன்னர் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு மூன்று ஈட்டிகளை அன்பளிப்பாக அனுப்பினார்கள். ஒன்றை நபி (ஸல்) அவர்கள் வைத்துக் கொண்டார்கள். ஒன்றை ஹஸ்ரத் அலி பின் அபூதாலிப் அவர்களுக்க கொடுத்தார்கள். மேலும் ஒன்றை ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களுக்கு கொடுத்தார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தமக்காக வைத்துக் கொண்ட ஈட்டியை ஹஸ்ரத் பிலால் அவர்கள், நபி (ஸல்) அவர்களுக்கு முன்னால் எடுத்துக் கொண்டு எதுவரை செல்வார்கள் எனில் அதனை நபி (ஸல்) அவர்களுக்கு முன் நடுவார்கள். மேலும் நபி (ஸல்) அவர்கள் அதன் பக்கமே தொழ வைப்பார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்கு முன்னால் அதேபோன்று ஹஸ்ரத் பிலால் அவர்கள் கொண்டு செல்வார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இந்த ஈட்டி தொடர்பாக இவ்வாறே அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் பிலால் அவர்கள் போரில் பங்கு பெறுவதற்காக ஷாமின் பக்கம் சென்று விட்டார்கள். ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு இவ்வாறு கூறப்படுகிறது. ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களிடம் வந்து கூறுகிறார்கள். ரஸூலின் கலீஃபா அவர்களே! நம்பிக்கையாளர்களின் மிகச்சிறந்த செயல் அல்லாஹ்வின் வழியில் போர் செய்வதாகும் என்பதை ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். பிலால்! நீங்கள் விரும்புவது என்ன என ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் கேட்டார்கள். நான் விரும்புவது, என்னை அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்ய அனுப்பி விட வேண்டும். எதுவரை எனில் நான் கொல்லப்பட வேண்டும் என ஹஸ்ரத் பிலால் அவர்கள் பதில் தந்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: பிலாலே! அல்லாஹ்விற்காகவும் எனது கண்ணியம் மற்றும் உரிமையை நினைவூட்டுகிறேன். நான் வயது முதிர்ந்தவன் மற்றும் பலவீனமானவனாக ஆகிவிட்டேன். எனது மரணத்தின் நேரம் அருகில் வந்து விட்டது. இதன் காரணமாகவே என்னுடன் தங்கி விடுங்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மரணம் வரை அவர்கள் அருகிலேயே இருந்தார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள், ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் மணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் அவர்களிடம் வந்தார்கள். அவர்களிடத்திலும் அதே விஷயத்தைக் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் கூறிய அதே பதிலைக் கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஜிஹாதிற்குச் செல்வதில் தீர்க்கமாக இருந்தார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் உமருக்கு முன்னால் அதே விஷயத்தைத் தெரிவித்தார்கள். நான் உங்களுக்குப் பிறகு பாங்கு அழைப்புப் பணியை எவரின் பொறுப்பில் ஒப்படைப்பேன் என ஹஸ்ரத் உமர் அவர்கள் கேட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் ஸஅது அவர்களிடம் ஒப்படையுங்கள். ஏனெனில் அவர் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலேயே பாங்கு கொடுத்தவர் ஆவார்கள். ஆகவே ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் ஸஅது மற்றும் அவர்களுக்குப் பின் அவரின் பிள்ளைகளுக்கு பாங்கின் பொறுப்பை ஒப்படைத்து, ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு அவரின் விருப்பத்திற்கேற்ப ஜிஹாதிற்கு அனுப்பி விட்டார்கள். (அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுஉஸ் ஸாலிஸ் பக்கம் 178)

இது ஓர் அறிவிப்பாகும். மற்றோர் அறிவிப்பில் ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கும் ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களுக்குமிடையில் பாங்கு தொடர்பாக நடைபெற்ற உரையாடல் பற்றி இவ்வாறு வருகிறது.

மூஸா பின் முஹம்மது தம் தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது ஹஸ்ரத் பிலால் அவர்கள் அந்த நாளில் அந்த நேரத்தில் பாங்கு கொடுத்தார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லடக்கம் இன்னும் நடைபெறவில்லை. அவர்கள் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று கூறியபோது, தமது உச்சரிப்பில் அஸ்ஹது என்பார்கள். பள்ளிவாசலில் மக்களின் அழுகையின் காரணமாக விம்மல் உருவானது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் நல்லடகம் நடந்த பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் பாங்கு சொல்லுமாறு கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் பதில் என்ற வகையில் கூறினார்கள். நான் உங்களுடன் இருக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் என்னை விடுதலை செய்திருந்தால் எவ்வாறு நீங்கள் கூறுகிறீர்களோ அதுவே அதற்கான வழியாகும். ஆனால் நீங்கள் என்னை அல்லாஹ்வுக்காக விடுதலை செய்திருந்தால் பிறகு எதற்காக

என்னை விடுதலை செய்தீர்களோ அதற்காக என்னை விட்டு விடுங்கள். ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள், நான் உங்களை அல்லாஹ்வுக்காக விடுதலை செய்தேன் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் அவர்கள், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு எவருக்காகவும் பாங்கு தரமாட்டேன் என்றார்கள். அது உங்கள் விருப்பம் என ஹஸ்ரத் அபூபக்ர் கூறினார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் பிலால் மதீனாவிலேயே தங்கியிருந்தார்கள். எப்போது வரை எனில் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஷாமை நோக்கி போர்ப்படை புறப்பட்டபோது ஹஸ்ரத் பிலால் அவர்களும் அப்படையுடன் ஷாம் சென்று விட்டார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுவுஸ் ஸாலிஸ் பக்கம் 178)

அஸத் அல்காபா அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அதற்கேற்ப ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ரிடம் கூறினார்கள். நீங்கள் தமக்காக என்னை விடுதலை செய்திருந்தால் என்னை நீங்கள் தடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் என்னை அல்லாஹ்வின் வழியில் விடுதலை செய்திருந்தால் என்னை அல்லாஹ்வின் வழியில் ஜிஹாதிற்காகச் செல்ல விடுங்கள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களிடம் செல்லுங்கள் எனக் கூறினார்கள். ஆகையால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஷாம் சென்று விட்டார்கள். மரணம் வரை அங்கேயே இருந்தார்கள். பெரும்பாலான அறிவிப்புகள் இவ்வாறே உள்ளது. அதாவது ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் காலத்தில் செல்லவில்லை. மாறாக ஹஸ்ரத் உமர் அவர்களின் காலத்தில் சென்றார்கள் என்பதாகும். மேலும் ஓர் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் பாங்கு கொடுத்து வந்தார்கள். இவ்வாறும் ஓர் அறிவிப்பு உள்ளது.

(அஸதுல் காபா ஃபீ மஅரிஃபதுல் சஹாபா. அல் முஜல்லிதுல் அவ்வல் பக்கம் 416 தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் லெபனான்)

ஓர் அறிவிப்பு இவ்வாறு வருகிறது. ஒருமுறை ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களை கனவில் கண்டார்கள். அன்னார், பிலாலே! உள்ளம் எவ்வளவு இறுகியுள்ளது. நீர் என்னை ஸியாரத் செய்யவரும் அந்த நேரம் இன்னும் வரவில்லையா? என்று கூறினார்கள். ஹஸ்ரத் பிலால் அவர்கள் மிகவும் துக்க நிலையில் கண்விழித்தார்கள். ஷாமில் இருந்தார்கள். மதீனாவின் பக்கம் பயணம் மேற்கொண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் அருளுக்குரிய அடக்கஸ்தலத்தில் ஆஜராகி கண் கலங்கி விம்மியழுது துடித்தார்கள். அத்தருணத்தில் ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் அவர்களும் வந்து விட்டனர். ஹஸ்ரத் பிலால் அவர்களுக்கு முத்தமிட்டார்கள். ஹஸ்ரத் ஹஸன், ஹுஸைன் அரவணைத்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் ஹுஸைன் அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களிடம், காலை பாங்கை தாங்கள் கொடுக்க வேண்டும் என நாங்கள் விரும்புகிறோம் என்றனர். எனவே அன்னார் பள்ளியின் மேல் தளத்தில் ஏறினார்கள்.

ஹஸ்ரத் பிலால் அவர்கள், அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் என்ற சொல்லைக் கூறியதும் அறிவிப்பாளர் கூறுகிறார்: மதீனா சிலிர்த்தெழுந்தது. பிறகு அவர்கள் அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்ற சொல்லைக் கூறியதும், பெண்கள் தம் வீடுகளை விட்டு வெளியே வந்தனர்.

அறிவிப்பாளர் கூறுகிறார்: அந்த நாளை விட அதிகமாக அழுகின்ற ஆண்களையும் அழுகின்ற பெண்களையும் பார்க்க முடிந்ததில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலமும், இந்த பாங்கும் நினைவுக்கு வந்து மக்கள் நிம்மதியிழந்தார்கள்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுவுஸ் ஸாலிஸ் பக்கம் 477 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஜிஹாதில் கலந்து கொள்ள ஹஸ்ரத் பிலால் அவர்கள் அனுமதி கேட்டபோது, ஹஸ்ரத் உமர் அவர்கள், பாங்கு சொல்வதிலிருந்து உங்களைத் தடுக்கும் விஷயம் எது? எனக் கேட்டார்கள்.

அதற்கு ஹஸ்ரத் பிலால் அவர்கள் கூறினார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப அவர்கள் மரணிக்கும் வரை பாங்கு கொடுத்து வந்துள்ளேன். பிறகு அபூபக்ர் அவர்களின் கட்டளைக்கேற்ப அவர்கள் மரணிக்கும் வரை பாங்கு கொடுத்து வந்தேன். ஏனெனில் அவர் எனது அருள்களின் கண்காணிப்பாளராக இருந்தார்கள். பிலாலே! அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வதை விட பெரிய வணக்கம் வேறு இல்லை என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன். எனவே ஹஸ்ரத் பிலால் அவர்கள் ஷாம் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஷாம் சென்றிருந்தபோது ஹஸ்ரத் உமர் அவர்கள் கேட்டுக் கொண்டதினால் ஹஸ்ரத் பிலால் அவர்கள் பாங்கு கொடுத்தார்கள். அன்றைய நாளுக்கு முன்னர் அவர்கள் இவ்வளவு அழுததை நாங்கள் பார்த்ததில்லை என அறிவிப்பாளர் கூறுகிறார்.

(அத்தப்காதுல் குப்ரா லி இப்னி ஸஅது. அல் ஜுஸுவுஸ் ஸாலிஸ் பக்கம் 416,417 பிலால் பின் ரபாஹ் தாருல் குதுபுல் இல்மிய்யா பைரூத் 2017)

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களின் இறுதிக் காலம் பற்றி கூறுகிறார்கள்: ஹஸ்ரத் பிலால் அவர்கள் தாம் வயதானபோது ஷாம் சென்று விட்டார்கள். அவர்களுக்கு மக்கள் பெண் தரவில்லை. இங்கு இந்த விஷயமும் கூறப்பட்டுள்ளது. ஆனால் அவர்கள் பல திருமணம் செய்துள்ளார்கள். மணபந்தம் ஏற்பட்ட என்ற விஷயம் முன்னரே கூறப்பட்டு விட்டது. ஷாம் செல்வதனால் பெண் தராமல் சிலர் இருந்திருக்கலாம் அல்லது ஷாம் சென்ற பிறகு மணபந்தம் கிடைக்காமல் இருந்திருக்கலாம். எவ்வாறிருப்பினும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அவர் பல திருமணங்கள் செய்ததற்கான அறிவிப்புகள் உள்ளன.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்: அவர்கள் ஷாமில் ஓரிடத்தில் மணபந்த விண்ணப்பம் வைக்கிறார்கள். நான் ஹப்ஷீ ஆவேன். விரும்பினால் பெண் தராமல் இருக்கலாம். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபியாக நினைத்து எனக்கு பெண் தந்தால் அதிக கருணையாக இருக்கும் என்றார்கள். அவர்கள் மணமுடித்துத் தந்தார்கள். மேலும் அவர் ஷாமிலேயே தங்கி விட்டார்கள். எவ்வாறிருப்பினும் அவர்களுக்கு முன்னரும் திருமணம் நடந்திருந்தது. முந்தைய மனைவிமார்கள் மரணித்து இருக்கலாம் அல்லது அவருடன் யாரும் செல்லவில்லை. அல்லது ஷாமில் திருமணம் செய்ய விரும்பினார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும் அவர்கள் முன்னரும் திருமணம் செய்துள்ளார்கள் என்பதற்கு இது சிறு விளக்கமாகும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: அவர்களுக்கு யாரும் பெண் தரவில்லை என்றே மற்ற அறிவிப்புகள் கூறுகின்றன. எந்த நூல் ஆதாரத்தின் கீழ் எழுதினார்கள் என்பதை இறைவனே நன்கு அறிவான். எவ்வாறிருப்பினும் அங்கு அவர்கள் பெண் கேட்டார்கள். அங்கு அவர்களுக்கு திருமணம் நடந்தது.

## திருக்குர்ஆனிலிருந்து...

நம்பிக்கை கொண்டவர்களே! நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களை விட்டு விட்டு, நிராகரிப்பாளர்களை (உங்களுடைய) நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்களுக்கு எதிராக மிகத் தெளிவான குற்றச்சாட்டி(னைச் சுமத்துவத)ற்குரிய வாய்ப்பை இறைவனுக்குக் கொடுக்க விரும்புகின்றீர்களா? (4:145)

M. SABAHUL ISLAM & A. MOHAIDEEN ALI, Melapalayam

மேலும் அவர்கள் ஷாமில் தங்கி விட்டார்கள். அசல் விஷயம் எது என்றால், பின்னர் கூறப்பட்ட கனவு பற்றியதே ஆகும். திருமணம் என்ற ஓர் இயல்பான விஷயம் வந்து விட்டது.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கனவில் அவர்களிடம் வந்தார்கள். பிலாலே! நீங்கள் என்னை மறந்து விட்டீர்கள். நமது கபரைக் காண ஒருபோதும் வரவில்லை என்று கூறினார்கள். அப்போதே அவர்கள் எழுந்து, பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்து மதீனா சென்றார்கள். மேலும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் கபரில் அழுதழுது துஆ செய்தார்கள். அந்த சமயத்தில் அவர்களுக்கு எவ்வளவு உருக்கம் ஏற்பட்டது என்றால், பிலால் வந்துள்ளார் என மக்களிடம் பொதுவாக செய்தி பரவியது. ஹஸ்ரத் ஹஸன் மற்றும் ஹுஸைன் அப்போது பெரியவர்களாகி இருந்தனர். ஓடோடி வந்தனர். நீங்கள் ரஸூல் கரீம் (ஸல்) அவர்கள் காலத்தில் பாங்கு கொடுத்து வந்தீர்கள் எனக் கூறினார்கள். ஆம் என்று அவர் கூறினார். பிறகு எங்களுக்கும் உங்கள் பாங்கை கேட்கச் செய்யுங்கள் எனக் கூறினார்கள். எனவே அவர்கள் பாங்கு கொடுத்தார்கள். மக்கள் அதனைக் கேட்டனர். (குத்பாத்தே மஹ்மூது தொகுதி 25 பக்கம் 182 குத்பா ஜுமுஆ 10 மார்ச் 1944) ஹஸ்ரத் உமர் தமது கிலாஃபத் காலக்கட்டத்தில் ஷாமில் ஊக்கத் தொகைக்காக அலுவலகம் நிறுவுவதற்கு அதாவது கணக்குப் பதிவேடு போன்றவைகளைச் செயல்படுத்த முழுமையான ரிக்கார்டு செய்தார்கள். அப்போது ஹஸ்ரத் பிலால் ஷாம் சென்று விட்டார்கள். மேலும் முஜாஹிதீன்களுடன் தங்கிவிட்டார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள், ஹஸ்ரத் பிலால் அவர்களிடம், பிலாலே! நீங்கள் உங்களது ஊக்கத் தொகையின் அலுவலை யாரிடம் வைக்க விரும்புகிறீர்கள். அதாவது தமது கணக்கு வழக்கு புத்தக மேற்பார்வைக்கு யாரிடம் ஒப்படைக்க விரும்புகிறீர். உமது கண்காணிப்பாளராக இருப்பார் எனக் கேட்டடார்கள். அதற்கு அவர்கள், அபூ ருவைஹாவிடம் என பதில் கூறினார்கள். ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் எனக்கும் அவருக்கும் இடையில் ஏற்படுத்திய இந்த சகோதர பந்தத்தின் காரணமாக அவரை நான் ஒருபோதும் விட்டு விடமாட்டேன்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 3 பக்கம் 176 குத்பா ஜுமுஆ 10 மார்ச் 1944)

ஹஸ்ரத் பிலால் அவர்களின் நேர்மை பற்றிய சம்பவம் ஓர் அறிவிப்பில் இவ்வாறு வருகிறது. அம்ரு பின் மைமூன் தமது தந்தையிடமிருந்து அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் பிலால் சகோதரர் தம்மை அரபைச் சேர்ந்தவராகக் கூறி வந்தார்கள். மேலும் அவர் அவர்களைச் சேர்ந்தவராகவே கருதி வந்தார்கள். அவர்கள் அரபின் ஒரு பெண்ணிடம் நிகாஹ்விற்கான தூதை அனுப்பினார்கள். அப்போது அப்பெண், ஹஸ்ரத் பிலால் அவர்கள் வந்தால் நாம் உம்மை நிகாஹ் செய்து கொள்வேன் என்று கூறினார்கள். பிறகு பிலால் அவர்கள் வந்தார்கள். தஷஹ்ஹுத் படித்தார்கள். பிறகு கூறினார்கள். நான் பிலால் பின் ரபாஹ் ஆவேன். இவர் எனது சகோதரர் ஆவார். மேலும் இவர் நல்லொழுக்கம் மற்றும் மார்க்க ரீதியில் நல்ல மனிதர் இல்லை. நீங்கள் இவரை நிகாஹ் செய்ய விரும்பினால் செய்து கொள்ளுங்கள். மறுத்துவிட விரும்பினால் மறுத்து விடுங்கள் என்றார்கள். அன்னார், எவருக்கு நீங்கள் சகோதரரோ அவரோடு நாம் நிகாஹ் செய்து கொள்வோம் என்று கூறினார்கள். எனவே அவர்களின் சகோதரரை அவர் நிகாஹ் செய்து கொண்டார்கள்.

ஸைது பின் அஸ்லம் அவர்கள் அறிவிக்கிறார்கள்: பனூ அபூ பகீர், ரஸூல் (ஸல்) அவர்களிடம் வந்து, இன்ன மனிதருடன் எனது சகோதரியின் நிகாஹ்வை செய்து விடுங்கள் என்றார். ரஸூல் (ஸல்) அவர்கள் கூறினார்கள். பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? அம்மக்கள் இரண்டாவது முறை வந்து, யாரஸூலல்லாஹ்! எங்கள் சகோதரியை இன்ன மனிதருடன் நிகாஹ் செய்து வையுங்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? என்றார்கள். இந்த மக்கள் மறுத்துவிட்டுச் சென்று விட்டனர். மூன்றாவது முறை வந்தார்கள். யாரஸூலல்லாஹ்! எங்கள் சகோதரியின் நிகாஹ்வை இன்ன மனிதருடன் செய்து வையுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், பிலால் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? அஹ்லே பைத்தைச் சேர்ந்த இவ்வாறான மனிதர் தொடர்பாக உங்கள் கருத்து என்ன? என்று கேட்டார்கள். அப்போது அந்த மக்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களுடன் தம் சகோதரியின் நிகாஹ்வை செய்து வைத்தனர் என்று அறிவிப்பாளர் கூறுகின்றார்.

(குத்பாத்தே மஹ்மூது தொகுதி 3 பக்கம் 179 குத்பா ஜுமுஆ 10 மார்ச் 1944)

நான் முன்னர் கூறிய, திருமணம் செய்யவில்லை என்று எழுதியுள்ள ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் மேற்கோள் அது வேறு சம்பவக் குறிப்புப் பக்கத்தின் கீழ் ஒருவேளை இருக்கலாம். முன்பும் திருமணம் செய்திருந்தார்கள்.

ஒரு மேற்கோள் இதுவாகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகிறார்கள்:

ஒருமுறை ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில் அவரும், அபூ ஸுஃப்யான் மற்றும் சில மக்காவின் தலைவர்கள் அவர்கள் வெற்றியின்போது முஸ்லிம்களாகி இருந்தனர். ஹஸ்ரத் உமர் அவர்களை சந்திக்க வந்தனர். அது அதிகப்படுத்தி எழுதப்பட்டுள்ளது என்பது எனது கருத்தாகும். ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலக்கட்டத்தில் அபூ ஸுஃப்யான் மற்றும் மக்கா வெற்றியின்போது முஸ்லிமாகி விட்ட சில மக்கத்து தலைவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களைச் சந்திக்க வந்திருந்தனர். அதே சமயம் எதேச்சையாக பிலால், அம்மார் மற்றும் சுஹைப் போன்றோரும் ஹஸ்ரத் உமர் அவர்களைச் சந்திக்க வந்தனர். இவர்கள் அடிமைகளாக இருந்தவர்கள் ஆவர். மிகவும் ஏழைகள் ஆவர். ஆனால் ஆரம்பத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட அந்த மக்களைச் சார்ந்தவர்கள் ஆவர். ஹஸ்ரத் உமர் அவர்களுக்கு தகவல் தரப்பட்டதும் அவர்கள் பிலால் ஆகியோரை முதலில் சந்திக்க அழைத்தார்கள். அபூ ஸுஃப்யான் அவர்கள், அவரிடம் கிட்டத்தட்ட இன்னும் அறிவீனத்தின் தன்மை எஞ்சியிருந்தது. இந்த காட்சியைக் கண்டதும் அவரின் உள்ளத்திலும் உடலிலும் சூடேறியது. நாம் காத்திருக்க இந்த அடிமைகளுக்கு சந்திப்பின் அனுமதி வழங்கப்படும். இந்த இழிவையும் நாம் பார்க்க வேண்டியதுள்ளது என்றார்கள். இது யாருடைய சான்று? முஹம்மது (ஸல்) அவர்கள் நம் அனைவரையும் இறைவன் பக்கம் அழைத்தார்கள். ஆனால் இவர்கள் உடனே ஏற்றுக் கொண்டனர். நாமோ மறுத்து விட்டோம். பிறகு அவர்களுக்கு நம்மீது மேன்மை கிடைக்க வேண்டுமா? அல்லது இல்லையா? என சுஹைப் கூறினார்கள்.

(சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 369)

இந்தச் சம்பவம் பற்றி ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஹஸ்ரத் பிலால் அவர்களின் அந்தஸ்து மற்றும் மதிப்பு பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்: ஹஸ்ரத் உமர் அவர்கள் தமது கிலாஃபத் காலத்தில் ஒருமுறை மக்கா வந்தார்கள். எவர்களின் தலைமுடியைப் பிடித்து இழுத்துச் செல்வார்களோ அந்த அடிமைகள் ஹஸ்ரத் உமர் அவர்களைச் சந்திக்க வரத் தொடங்கினார்கள். அது பெருநாள் தினமாக இருந்தது. அடிமைகள் வருவதற்கு முன்னர் மக்காவின் பெரும் பெரும் தலைவர்களின் மகன்கள் அன்னாருக்கு ஸலாம் கூற வந்திருந்தார்கள். அவர்கள் அப்போது தான் அமர்ந்தார்கள். பிலால் வந்து விட்டார். அவர்

## திருக்குர்ஆனிலிருந்து...

நீங்கள் நன்றி செலுத்தி நம்பிக்கையும் கொள்வீர்களாயின் உங்களைத் தண்டிப்பதில் அல்லாஹ்விற்கு என்ன கிடைக்கப் போகிறது? அல்லாஹ் மதிக்கக் கூடியவனும் நன்று அறிபவனுமாவான். (4:148)

A. SAMSUL ALAM - Active Ameer, Melapalayam

அடிமையாக இருந்து விட்டார்கள். அவரை மக்கள் அடித்து உதைத்து வந்தார்கள். அவரைக் கூரான, கரடு முரடான கற்களைக் கொண்டு ஆடையற்ற உடலில் தேய்ப்பார்கள். அவரின் நெஞ்சில் பெரும் பெரும் சுமையுள்ள கற்களை வைத்து நான் லாத், உஸ்ஸாவை வணங்குவேன் எனக் கூறு என்பார்கள். ஆனால் அவர் அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹ் என்றே கூறுவார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் பிலாலை பார்த்ததும் அந்தத் தலைவர்களைச் சற்று பின்தள்ளி அமருங்கள். பிலால் அமர்வதற்கு இடம் தாருங்கள் என்றார்கள். இப்போது அவர்கள் அமர்ந்து தான் இருப்பார்கள். மேலும் ஓர் அடிமையாக இருந்த சஹாபி வந்து விட்டார். ஹஸ்ரத் உமர் அவர்கள் மீண்டும் அந்தத் தலைவர்களை பின்நகருங்கள். அவரை உட்கார விடுங்கள் என்றார்கள். சிறிது நேரம் கழிந்திருக்கும். மற்றொரு சஹாபி வந்து விட்டார். ஹஸ்ரத் உமர் அவர்கள் வழக்கம் போல் அந்த தலைவர்களிடம், பின் நகர்ந்து அவருக்கு உட்கார இடமளிக்கவும் என்றார்கள். எதார்த்தமான விஷயம் என்னவெனில், அல்லாஹ் அவர்களை இழிவுபடுத்த இருந்தான். எனவே ஒருவர் பின் ஒருவராக எட்டு பத்து அடிமைகள் வந்து விட்டனர். ஒவ்வொரு முறையும் ஹஸ்ரத் உமர் அவர்கள் அந்தத் தலைவர்களிடம் பின் நகருங்கள். இவர்களுக்கு உட்கார இடமளியுங்கள் என இதையே கூறினார்கள். அந்நாட்களில் பெரும் பெரும் அறைகள் கட்டப்படவில்லை. மாறாக எளிமையான குடில்களே இருக்கும். அதில் அதிக நபர்கள் அமர முடியாது. அடிமை சஹாபிகள் அறையில் நிரம்பியதால் அந்தத் தலைவர்கள் செருப்பு இருக்கும் இடத்தில் உட்கார வேண்டியது வந்தது. இந்த இழிவு அவர்களுக்கு தாங்க முடியாததாக இருந்தது. அவர்கள் அப்போதே எழுந்து வெளியே வந்து, ஒருவர் மற்றவரிடம் இவ்வாறு பேசிக் கொண்டனர். பார்த்தீர்களா? இன்று நாம் எவ்வளவு இழிவுக்கு உள்ளாக்கப்பட்டோம். இந்த அடிமைகள் நமக்கு தொண்டு செய்தவர்கள். இவர்களை நமக்கு மேல் உட்கார வைத்து பின்தள்ளும் கட்டாயத்திற்கு ஆளாக்கி எதுவரை என்றால் நாம் தள்ளித்தள்ளி செருப்பு வைக்கும் இடத்திற்கு வந்து விட்டோம். அனைத்து மக்களின் பார்வையில் இழிவுக்கு ஆளாகி விட்டோம்.

ஒரு மனிதர், அவர்களில் அதிக புரியும் திறன் கொண்டவர். இந்த அனைத்து விஷயங்களைக் கேட்டதும் கூறினார்: உண்மை தான்; நாம் இழிவுபடுத்தப்பட்டோம். ஆனால் கேள்வி என்னவெனில், இறுதியில் யாருடைய செயலினால் இவ்வாறு நடந்தது. நமது தந்தை, சகோதரர்கள், முஹம்மது (ஸல்) மற்றும் அவர்களின் தோழர்களை அடித்து துன்பம் தரும்போது இந்த அடிமைகள் அன்னார் மீது தனது உயிரை அர்ப்பணித்தவர்கள் ஆவர். இன்று முஹம்மது (ஸல்) அவர்களின் அரசு உள்ளது. எனவே நீங்கள் சுயமே முடிவெடுத்துக் கொள்ளுங்கள். அவர்களை ஏற்றுக் கொண்ட எந்த மக்களுக்க மதிப்பளிக்கப்பட வேண்டும். அடித்து உதைத்த உங்களுக்கா? அல்லது தமது உயிரை இஸ்லாத்திற்கான அர்ப்பணித்த இந்த அடிமைகளுக்கா? அவர்களுக்கே கண்ணியம் தரப்பட வேண்டும் என்றால் பிறகு இன்றைய நிகழ்வால் ஆட்சேபனை ஏன் உண்டானது? அடிமைகளுடன் நடந்து கொள்ளும் விதம் போன்று உங்களிடம் நடந்து கொள்ளாததற்கு உமது தந்தை பாட்டன்களின் செயலின் விளைவே ஆகும். ஓர் அறிவார்ந்த மனிதர் இந்த விஷயத்தைப் புரிய வைத்ததும் அந்த மக்கள் புரிந்து கொண்டனர். நாம் விளக்கத்தைப் புரிந்து கொண்டோம். ஆனால் இந்த இழிவைப் போக்க தீர்வு உண்டா? அல்லது இல்லையா? என்பதுதான் கேள்வி ஆகும். நமது தந்தை பாட்டனிடமிருந்து பெரும் தவறு ஏற்பட்டு விட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் நமது நெற்றியிலுள்ள இந்த இழிவின் கறையைக் கழுவுவதற்கு இந்த தவறுக்கான பரிகாரம் இறுதியில் இருக்க வேண்டும் என்றனர். நமது சிந்தனைக்கு எந்த விஷயமும் வரவில்லை. வாருங்கள். சென்று ஹஸ்ரத் உமர் அவர்களிடமே இந்த இழிவைப் போக்கும் தீர்வைக் கேட்போம் என்று அவர்கள் அனைவரும் முடிவு செய்தனர். அவர்கள் மீண்டும் ஹஸ்ரத உமர் அவர்களின் அவைக்குச் சென்றபோது கூட்டம் முடிந்திருந்தது. சஹாபாக்கள் அனைவரும் சென்று விட்டனர். அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களிடம், இன்று எங்களுக்கு இந்த சபைக்கு வந்ததினால் ஏற்பட்ட துன்பம் தொடர்பாக நாங்கள் உங்களிடம் ஆலோசனை பெற வந்துள்ளோம் என்று கூறினர். ஹஸ்ரத் உமர் அவர்கள், பாருங்கள். தவறாக நினைக்க வேண்டாம். இந்த மக்கள் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஆவார்கள். ரஸூல் (ஸல்) அவர்களின் சபையில் எப்போதும் முன்னால் அமர்பவர்கள் ஆவர். எனவே அவர்களை முன்னால் அமர வைப்பது எனக்கும் கட்டாயதானதாகும். இந்த எனது செயலின் காரணமாக நிச்சயம் உங்களுக்கு துன்பம் ஏற்பட்டுள்ளது. ஆனால் நான் கட்டாயத்தில் இருந்தேன் என்று கூறினார்கள். அம்மக்கள், நாங்கள் உங்கள் கட்டாய நிலையை அறிவோம். நாங்கள் உங்களிடம் இந்த இழிவினைப் போக்கும் தீர்வு இருக்கிறதா? இந்தக் கறையைக் கழுவ ஏதாவது தண்ணீர் உள்ளதா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம் என்றனர். ஹஸ்ரத் உமர் அவர்கள் அந்த இளைஞர்களின் தந்தை பாட்டனாரின் மதிப்பு மரியாதை, அவர்களின் கம்பீரம் மற்றும் ஆளுமைகளைப் பார்த்தவர் ஆவார்கள். இந்த இளைஞர்களின் இந்த விஷயத்தைக் கேட்டதும், அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் மளமளவென்று வந்தது. இந்த மக்கள் தம் பாவத்தின் காரணமாக எங்கிருந்து எங்கு வந்து விழுந்து விட்டனர். இவர்களுக்கான பதிலைத் தர முடியாத அளவிற்கு விம்மல் ஆட்கொண்டது. ஷாமின் பக்கம் கையால் சைகை செய்தார்கள். அந்நாட்களில் கைசர் ரோம் படையுடன் போர் நடந்து கொண்டிருந்தது. இப்போது இந்த இழிவின் கறையைக் கழுவ அந்தப் போரில் கலந்து கொண்டு தமது உயிரைத் தர வேண்டும் என்பது அதன் பொருளாகும். எனவே அவர்கள் அப்போதே வெளியே வந்து தமது ஒட்டகங்களின் மீது ஏறி ஷாமிற்குப் பயணம் செய்தார்கள். அவர்களில் ஒருவர் கூட உயிருடன் திரும்பி வரவில்லை என்று வரலாறு கூறுகிறது. இவ்வாறு அவர்கள் தமது இரத்தத்தின் மூலம் தமது தந்தை பாட்டனார்களின் செயல்களினால் ஏற்பட்ட அவர்களின் நெற்றியில் இருந்த அந்த இழிவின் கறையை அழித்தார்கள். (தஃப்ஸீரே கபீர் தொகுதி 9 பக்கம் 289–290)

எனவே, தியாகங்கள் செய்ய வேண்டியது வருகிறது. அப்போது தான் மதிப்பு கிடைக்கிறது என்பது ஒரு விஷயமாகும். மேலும் தியாகங்கள் செய்யக் கூடியவர்கள் ஆரம்பத்தில் இருந்தே நன்றி உணர்வு காட்டுபவர்களின் அந்தஸ்து எப்போதும் உயர்வானதாகும். அவர்கள் ஹப்ஷீ அடிமையாக இருந்தாலும் சரி, அல்லது வேறு வகை அடிமையாக இருந்தாலும் சரி. இது இஸ்லாத்தின் அழகிய போதனை ஆகும். இது அந்தப் பதவி ஆகும். அதனை இஸ்லாம் உண்மையின் மீது வைத்துள்ளது. தனது தகுதியின் அடிப்படையில் வைத்துள்ளது. மேலும் அனைவருக்கும் கிடைக்கிறது. எவர் செல்வந்தர்? எவர் ஏழை? என்று அல்லாமல் தியாகங்கள் செய்பவர்களாக இருந்தால் நன்றி உணர்வு உள்ளவர்களாக இருந்தால் தமது உயிரை அர்ப்பணிப்பவராக இருந்தால் அனைத்தையும் தியாகம் செய்பவர்களாக இருந்தால் அவர்களுக்கு இந்தப் பதவி கிடைக்கும் – இன்ஷா அல்லாஹ். ஹஸ்ரத் பிலால் அவர்களின் இந்தக் குறிப்புகளின் தொடர் இன்னும் எஞ்சியுள்ளன. இனிவரும் உரையில் கூறப்படும் – இன்ஷா அல்லாஹ்.

**(தமிழாக்கம் : முஅல்லிம் M. ஷாஜஹான்)**

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நயவஞ்சகர்கள் நரக ஆழத்தின் அடிமட்டத்தில் இருப்பர். அவர்களுக்கு உதவி செய்பவராக (எவரையும்) நீர் ஒருபோதும் காண மாட்டீர். (4:146)

A. BASHEER AHMAD, Melapalayam

# ஸய்யிதுனா அமீருல் மு:.மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீ:.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் அயர்லாந்து சுற்றுப் பயணம் 28 செப்டம்பர் 2014

ஹுஸுர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ் அவர்கள் காலை 6.10 மணிக்கு மஸ்ஜிது மர்யம் வருகை தந்து :.பஜ்ர் தொழுகையைத் தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸுர் அன்வர் அவர்கள் மீண்டும் தன்னுடைய தங்கும் இடமான அடுக்கு மாடிக்குச் சென்று விட்டார்கள். அங்கு அவர்கள் அலுவலகக் கடிதங்கள் மற்றும் அறிக்கையைப் பார்வையிட்டு வழிகாட்டலை வழங்கினார்கள்.

இன்றைய தினம் திட்டமிட்டபடி தேசிய மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா மற்றும் அயர்லாந்து ஜமாஅத்தின் தேசிய அளவிலான மஜ்லிஸே ஆமிலா (செயற்குழு உறுப்பினர்களின்) கூட்டம் தனித்தனியாக ஹுஸுர் அவர்களுடன் நடைபெறவிருந்தது. ஹோட்டலின் ஒரு மாநாட்டு அறையில் இந்த கூட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 11.00 மணிக்கு ஹுஸுர் அவர்கள் மாநாட்டு அறைக்கு வருகை தந்தார்கள். முதலில் அயர்லாந்தின் தேசிய குத்தாமுல் அஹ்மதிய்யாவின் செயற்குழு உறுப்பினர்களுடனான கூட்டம் ஹுஸுர் அவர்களின் துஆவுடன் ஆரம்பமானது. ஹுஸுர் அவர்கள் கேட்டதற்கிணங்க பொதுச் செயலாளர் இங்கு 3 மஜ்லிஸ்களிலுள்ள காதிம்களின் எண்ணிக்கை 71 ஆகும். மேலும் மண்டபம் பிடித்து முறையாக தேசிய இஜ்திமா நடைபெற்று வருகின்றது. அதில் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறுகின்றது. அனைத்து மஜ்லிஸ்களுடனும் தொடர்பு வைக்கப்பட்டு முறையாக அறிக்கையும் பெறப்படுகின்றது எனக் கூறினார்.

ஹுஸுர் அவர்கள் தர்பிய்யத் செயலரிடம் திருமணமான மற்றும் திருமணம் ஆகாத எத்தனை காதிம்கள் இருக்கிறார்கள் என்பதை அறிவீர்களா? எனக் கேட்டார்கள். அதற்கு தர்பிய்யத் செயலர் 'இல்லை' எனக் கூறினார். ஹுஸுர் அவர்கள் இதைப் பற்றி தாங்கள் அறிந்திருக்க வேண்டும். மேலும் அது தொடர்பாக உங்களுடைய பதிவேட்டிலும் இருக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹுஸுர் அவர்கள் தஜ்னீது (புள்ளி விபரம்) செயலரை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: முறையாக ஒவ்வொரு காதிமிடமிருந்தும் தஜ்னீது படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள். பாகிஸ்தானிலிருந்தோ யூ.கே.-விலிருந்தோ தஜ்னீது படிவத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். மேலும் ஒவ்வொரு காதிமுடைய விவரங்களும் தங்களுடைய பதிவேட்டில் இருக்க வேண்டும். காதிமின் பெயர், அவருடைய தந்தையின் பெயர், வயது, கல்வி, தொழில், வருமானம், திருமணம் ஆனவரா? இல்லையா? போன்ற விவரங்கள்.

ஹுஸுர் அவர்கள் பொருளாளரிடம் உண்மை என்னவென்றால், சந்தா கொடுக்கின்றவர் வருமானத்திற்கேற்ப சந்தா கொடுக்கின்றார். ஆனால் எவர் தன்னுடைய வருமானத்திற்கேற்ப சந்தா கொடுப்பதில்லையோ தன்னுடைய வருமானத்தை வெளிப்படுத்த-வில்லையோ அவர் நான் இவ்வளவு தொகையைத் தான் சந்தாவாகக் கொடுப்பேன் என்று எழுதிக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள்.

ஹுஸுர் அவர்கள் கேட்டதற்கிணங்க தர்பிய்யத் செயலாளர் திருமணமானவர்களின் வாழ்க்கை மிகவும் சிறப்பாக இருக்கின்றது எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் எவர்களுக்கு நிக்காஹ் நடக்கின்றதோ அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட வேண்டும். கணவன்மார்கள் மனைவிகளின் உரிமைகள் பற்றி அறிந்திருக்க வேண்டும். திருமணத்தின் நோக்கமானது வாழ்க்கையின் தரம் உயர வேண்டும் என்பதோ நல்ல இருப்பிடம் கிடைக்க வேண்டும் என்பதோ அல்ல. திருமணத்தின் உண்மையான நோக்கத்தின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். மேலும் இறையச்சத்தை எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். ஹுஸுர் அன்வர் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். தற்போது பள்ளிவாயிலும் கட்டி விட்டீர்கள். ஆகவே அதை நிரப்புங்கள். மேலும் மற்ற இடங்களில் எங்கெல்லாம் தொழுகை நிலையங்கள் இருக்கின்றதோ அங்கு முறையாக தொழுகைக்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள் எனக் கூறினார்கள்.

ஹுஸுர் அவர்கள் த:.லீம் செயலரிடம் குத்தாமின் பாடத் திட்டத்தில் என்ன புத்தகத்தைத் தேர்ந்தெடுத்துள்ளீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு த:.லீம் செயலர் 'புதிய திட்டம்' என்ற புத்தகத்திலிருந்து தேர்வு நடத்தப்பட்டுள்ளது எனக் கூறினார். ஹுஸுர் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் புத்தகத்தையும் பாடத்திட்டத்தில் வையுங்கள் எனக் கூறினார்கள். அதற்கு 'ஹகீத்துல் வஹி' என்ற புத்தகத்தின் நூறு பக்கங்கள் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது. அக்டோபர் மாதத்தில் அதற்கான தேர்வும் நடைபெற உள்ளது என த:.லீம் செயலர் கூறினார். தப்லீக் செயலரிடம் ஹுஸுர் அவர்கள் தப்லீகிற்கான தங்களுடைய இலக்கை தாங்கள் சுயமே நிர்ணயிக்க வேண்டும். குத்தாமுல் அஹ்மதிய்யா உருவாக்கப்பட்டதே இதற்காகத்தான். தாங்கள் தங்களுடைய திட்டங்களையும் நிகழ்ச்சிகளையும் உருவாக்குங்கள். அதற்கேற்றார்போல் தங்களுடைய முறையில் பணியைச் செய்யுங்கள். கருத்தரங்குகளை நடத்துங்கள். நீங்கள் படித்த மக்களாக இருக்கின்றீர்கள். உங்களில் சிலர் மருத்துவர்-களாகவும் உள்ளீர்கள். நீங்கள் உங்களுடைய மக்கள் தொடர்பை அதிகரியுங்கள். மேலும் மக்களை அழைத்து கூட்டங்களை நடத்துங்கள். தற்போது பள்ளிவாயில் திறக்கப்பட்டதன் பிறகு மக்களின் கவனம் இதன் பக்கம் திரும்பும். ஹுஸுர் அவர்கள் உங்களிடம் முபலிக்கும் இருக்கின்றார். அவரை அழைத்து கேள்வி பதில் நிகழ்ச்சிகளை நடத்துங்கள் என்று கூறினார்கள். மஜ்லிஸே ஆமிலாவின் ஒவ்வோர் உறுப்பினரும் குறைந்தது ஒரு குடும்பத்துடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். கடந்த மூன்று ஆண்டுகளாக குத்தாமுல் அஹ்மதிய்யா எந்த பைஅத்தும் வாங்கவில்லை. ஆக தற்போது தன்னுடைய தொடர்பை நிலைநாட்டுங்கள். தோழமையை ஏற்படுத்துங்கள். மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தியவாறே பணிபுரியுங்கள்.

தப்லீக் செயலர் தப்லீகிற்காக அரங்குகள் அமைக்கின்றார் எனக் கூறினார். அதற்கு ஹுஸுர் அவர்கள் இதுவும் ஒரு வழிமுறை ஆகும். மேலும் இது பழைய நடைமுறை ஆகும். எதுவரை இந்தப் பழைய நடைமுறையின் மீதே நீங்கள் சார்ந்திருப்பீர்கள். தப்லீகிற்காகவும் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்காகவும் புதிய வழிமுறைகளை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும். Leaflets விநியோகம் தொடர்பாக,

காதிம்கள் கடந்த மூன்று மாதங்களில் 37000 பிரசுரங்களை விநியோகம் செய்துள்ளார்கள். மேலும் கடந்த ஆண்டு 90000 பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது என்று ஹுஸூர் அவர்களிடம் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதற்கு ஹுஸூர் அவர்கள் அயர்லாந்து ஒரு சிறிய நாடாகும். நீங்கள் முயன்றால் முழு நாட்டிலும் தூதுச் செய்தியை எட்ட வைக்க முடியும் எனக் கூறினார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள். கடந்த ஆண்டு யூ.கே -விலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவிலிருந்து வெளியேறிய மாணவர்கள் ஸ்பெயினுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்கள் இரண்டு மூன்று வாரங்களில் மூன்று இலட்சம் Pamphlets விநியோகம் செய்துள்ளனர். அதே மாதத்தில் ஜாமிஆவின் 8 அல்லது 9 மாணவர்கள் சுற்றுலாவிற்காக ஸ்பெயின் சென்றனர். அவர்களும் அங்கு 50 ஆயிரத்தை விட அதிகமான Pamphlets -ஐ விநியோகம் செய்துள்ளனர். இங்கு அயர்லாந்திலும் ஜாமிஆவின் மாணவர்களை தப்லீகிற்காக அனுப்பலாம் என்று ஹுஸூர் அவர்கள் கூறினார்கள். ஹுஸூர் அவர்கள் குத்தாமுல் அஹ்மதிய்யாவிற்கு வழிகாட்டல் வழங்கியவாறு உங்களுக்கு எங்கெல்லாம் சந்தர்ப்பம் கிடைக்குமோ அங்கு அதாவது இரயில் நிலையங்கள் மற்றும் பிற இடங்களிலும் ஃப்லாயர்ஸ் விநியோகம் செய்யுங்கள். மேலும் உள்ளூர் அரசாங்க அமைப்பு மற்றும் கவுன்சிலர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி மரம் நடுவதற்கான ஏற்பாட்டைச் செய்யுங்கள். பூங்காவிலும் 2 மரங்களை வையுங்கள். அவ்வாறு செய்தால் நீங்கள் அறிமுகமாகி விடுவீர்கள். அதன் மூலம் தப்லீகிற்கான வழி பிறக்கும் என கூறினார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் இங்கு இரத்ததான முகாமிற்கான ஏற்பாடு செய்யுங்கள். மலேரியாவின் காரணமாக ஆசியர்களின் இரத்தத்தை வாங்கமாட்டார்கள் என்றால் உள்ளூர்வாசிகள் இரத்தம் கொடுக்கட்டும். அண்டை அயலார்களும் அதில் கலந்து கொள்ளட்டும். இவ்வாறு நீங்கள் இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடு செய்தால் இந்நிகழ்வு அறிமுகம் மற்றும் தொடர்புக்கான காரணமாக அமையும் என்று கூறினார்கள்.

பொருளாளரிடம் ஹுஸூர் அவர்கள் பட்ஜெட் தொடர்பாகக் கேட்டார்கள். அதற்கு அவர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் பட்ஜெட் 10,505 யூரோ எனக் கூறினார். அதற்கு ஹுஸூர் அவர்கள் உங்களிடம் வருமானம் உடையவர்கள் எத்தனை நபர்கள்; வருமானம் இல்லாதவர்கள் எத்தனை நபர்கள்; மாணவர்கள் எத்தனை பேர்; மேலும் மாணவர் அல்லாத வேலையில்லாத இளைஞர்கள் எத்தனை பேர் உள்ளார்கள் என்ற பதிவேடு உங்களிடம் இருக்க வேண்டும் எனக் கூறினார்கள்.

கித்மத்தே கல்க் செயலரிடம் ஹுஸூர் அவர்கள் Charity Walk நிகழ்ச்சிகளை நடத்துங்கள். மேலும் குத்தாம் தங்களுடைய உடையை அணிந்து அதில் செல்லட்டும். அவர்களுடைய தொப்பியில் அவர்களுடைய அமைப்பின் அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடிய வாசகங்கள் இருக்க வேண்டும். நாங்கள் தங்களுடைய நாட்டின் நிலைமைகள் மற்றும் சூழலுக்கேற்றவாறு சுயமே புதிய புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும் என வழிகாட்டல் வழங்கினார்கள்.

ஹுஸூர் அவர்கள் பல நாடுகளில் மேற்கொண்ட சுற்றுப் பயணத்தின்போது குத்தாமுடன் நடந்த மஜ்லிஸே ஆமிலாவின் கூட்டத்தில் மிகவும் விரிவான வழிகாட்டல்கள் வழங்கியுள்ளார்கள். அது அல் ஃபஸ்ல் பத்திரிகையில் வெளி வந்துள்ளது. அந்த வழி அந்த வழிகாட்டலுக்கு ஏற்ப அனைத்துத் துறைகளும் தத்தமது நிகழ்ச்சிகளை உருவாக்கவும் மேலும் ஹுஸூர் அவர்கள் திட்டமிட்டு செயல்படுங்கள். தங்களின் முன்மாதிரியை வெளிப்படுத்துங்கள். தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். எந்த வேலையை ஆரம்பித்தாலும் தொழுகையின் பக்கம் கவனம் செலுத்துங்கள். எந்த வேலையை ஆரம்பித்தாலும் துஆவுடன் தொடங்குங்கள். துஆவின் பக்கம் கவனம் செலுத்துங்கள். உறுதியுடன் பணிபுரியுங்கள் என்று கூறினார்கள்.

கண்காட்சி தொடர்பாகக் கூறப்பட்டபோது ஹுஸூர் அவர்கள் கண்காட்சி நடத்துங்கள். அதில் வைக்கக்கூடிய ஒவ்வொரு பொருளிலிருந்தும் ஜமாஅத்தின் அறிமுகம் வெளிப்படக் கூடியதாகவும் தப்லீகிற்கு வழிவகுக்கக் கூடியதாகவும் அந்தக் கண்காட்சி இருக்க வேண்டும். நீங்கள் கண்காட்சி அமைப்பதாக இருந்தாலும், Charity Walk நடத்தினாலும், புத்தக அரங்கு அமைப்பதாக இருந்தாலும் அல்லது வேறு ஏதாவது நிகழ்வுகளை நடத்தினாலும் சரி அது தப்லீகிற்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்க வேண்டும் என்று கூறினார்கள். மேலும் ஹுஸூர் அவர்கள் தப்லீக் செய்யும்போது அனைத்து விதமான புத்தகங்களும் கொடுங்கள். யாருக்கு நீங்கள் புத்தகங்கள் கொடுக்கின்றீர்களோ அவர் எந்த விஷயத்தில் ஆர்வம் உள்ளவராக இருக்கிறார் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். இஸ்லாத்தில் அவருக்கு விருப்பம் இருக்கின்றது என்றால் 'இஸ்லாமிய போதனைகளை தத்துவ ஞானம்' என்ற புத்தகத்தைக் கொடுங்கள். பொருளாதாரத்தில் அவருக்கு விருப்பம் இருக்கின்றது என்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய புத்தகத்தைக் கொடுங்கள். சமாதானத்தை நிலைநாட்டுவதில் அவருக்கு விருப்பம் இருக்கின்றது என்றால் 'உலக வீழ்ச்சியும் அமைதிக்கான வழிமுறையும்' என்ற புத்தகத்தைக் கொடுங்கள். ஒவ்வொருவருக்கும் அவருடைய தேவை மற்றும் விருப்பத்தை அறிந்தவாறு புத்தகங்களைக் கொடுங்கள். தற்போது வரை உள்ளூர்வாசிகள் மற்றும் ஆட்சியாளர்களுடன் உங்களுக்கு ஏற்பட்ட அறிமுகத்தை அதிகரியுங்கள். தற்போது வரை ஏற்பட்ட தொடர்புகள் மற்றும் ஒர் இணைப்பை விட்டு விடாதீர்கள். ஹுஸூர் அவர்கள் கல்வித்துறை மற்றும் பொது நூலகங்களிலும் புத்தகங்களை வையுங்கள். இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம், Life of Muhammadï Islam Response to Contemporary Issues, Pathway to Peace, The Blessed Model of the Holy Prophet, Salam and the Caricatures போன்ற புத்தகங்களை நூலகங்களில் வையுங்கள். மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ் யூ.கே சார்பாக ஒரு லட்சம் அல்லது ஒன்றரை லட்சம் Life of Muhammad என்ற புத்தகத்தை சுயமே வெளியிட்டு விநியோகம் செய்துள்ளது. அதற்கான எந்த செலவையும் ஜமாஅத் இடமிருந்து பெறவில்லை. உங்களுக்கு இந்தப் புத்தகம் குறைந்த விலையில் தேவை என்றால் யூ.கே -விலுள்ள அன்ஸாருல்லாஹ்விடம் கூறுங்கள். அவர்கள் உங்களுக்கு கொடுப்பார்கள். மேலும் இந்தப் புத்தகத்தை இங்கும் விநியோகம் செய்யுங்கள். தேசிய அளவிலான குத்தாமுல் அஹ்மதிய்யாவின் இந்த மஜ்லிஸே ஆமிலா கூட்டம் 11.30 மணிக்கு முடிவு பெற்றது. இறுதியில் மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்கள் ஹுஸூர் அவர்களுடன் குரூப் ஃபோட்டோ எடுப்பதற்கான நற்பாக்கியத்தைப் பெற்றார்கள்.

**- தமிழாக்கம் : மவ்லவி அபுல் ஹஸன் ஆபிது**

*(தொடர்ச்சி அடுத்த இதழில்....)*

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785
Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 5 Thursday 22 October 2020 Issue No. 43

MANAGER
NAWAB AHMAD
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஒருவர் மரணித்து விட்டால் அவரது குழந்தைகளை யார் வளர்ப்பார் என்ற கேள்வியே எழாத அளவுக்கு முழு சமுதாயத்தின் பண்பு இருக்க வேண்டும்

*ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:*

*“அனாதைகளை கவனிப்பது, விதவைகளுடன் நல்ல முறையில் நடந்து கொள்வது ஆகிய இவ்விரண்டும் எத்தகையதென்றால், அது சமுதாயத்தில் தைரியத்தையும் வீரத்தையும் உருவாக்கி விடுகிறது. இவை சமுதாயத்தில் இல்லாவிட்டால் மாறாக, அதற்கு மாற்றமாக அவர்களுடைய நபர்களின் முன்மாதிரி விதவை இருந்தும் அவர்களை வேலைக் -காரர்களாக இன்னும் கூறுவதாயின், வேலைக்காரர்களை விட மிக மோசமான நிலையிலும் சின்னச்சின்ன விஷயத்திலும் அவர்களை கன்னத்தில் அடிக்க ஆயத்தமாகி விட்டால் மரணிக்க எவர் விரும்புவார்? ஒவ்வொருவரும் பயப்படுவார். ஒவ்வொருவரும் மரணத்திற்கு பதற்றப்படுவார். எனது மரணம் எனது குழந்தைகளின் மரணம் ஆகும் என நினைப்பார். எனவே ஒருவர் மரணித்து விட்டால் அவரது குழந்தைகளை யார் பராமரிப்பார்? என்ற கேள்வியே எழாத வகையில் முழு சமுதாயத்தின் பண்பு இருக்க வேண்டும். மாறாக, மக்கள் தாமாகவே நெஞ்சங்களில் அணைத்தவாறு தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். தனது குழந்தைகளைப் போன்று - இன்னும் கூறுவதென்றால் - தம் குழந்தைகளை விட அதிகமாக அவர்களுடன் அன்புடனும், மென்மையாகவும், பரிவாகவும் நடந்து கொள்ள வேண்டும்.*

*ரஸூல் கரீம் (ஸல்) அவர்களின் காலத்திலுள்ள ஒரு சம்பவம். ஒரு குழந்தை அனாதையாகி விட்டது. அவனை நான் பராமரிக்கின்றேன் என ஒருவரும், நான் பராமரிக்கிறேன் என இன்னொருவரும் கூறினர். இவ்வாறு நபித்தோழர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. கடைசியில் ரஸூல் கரீம் (ஸல்) அவர்களிடம் இந்த விவகாரம் வந்தது. அதற்கு அவர்கள், அவனை முன்னால் வையுங்கள். அவன் யாரை விரும்புகிறானோ அவரிடம் ஒப்படையுங்கள் எனக் கூறினார்கள்.*

*ஆனால் இன்றைய காலத்தில் என்ன நிலைமை என்றால், ஒருவர் மரணிக்கிறார் என்றால், அவருக்கு தனது வாழ்க்கையின் கடைசி நேரத்தில், எனக்குப் பிறகு எனது மனைவி மக்களுக்கு என்ன நேரிடும் என்ற கவலையே மிகப்பெரும் கவலையாகவும், கலக்கமாகவும் இருக்கிறது. யார் அவர்களைப் பராமரிப்பார்? யார் அவர்களை கண்காணிப்பார்கள்? அவர்களை அன்புடனும் பரிவுடனும் யார் பார்த்துக் கொள்வார்கள்? என்ற கவலை ஏற்படுகிறது. அவர் மரணித்து விடும்போது அவருடைய மனைவி பிள்ளைகளைப் பராமரிக்கும் கேள்வி எழுகிறது. அப்போது ஒருவர், பிள்ளையை தான் பராமரிக்க வேண்டும் என்று எனது உள்ளம் நாடுகிறது; ஆனால் நான் என்ன செய்வேன்? என் மீது பெரும் சுமை இருக்கிறது என ஒருவர் கூறுகிறார். இன்னொருவர், எனது நோக்கமும் அதுதான்; ஆனால் மிகவும் கஷ்டங்கள் இருக்கின்றன என்கிறார். மூன்றாமவர் நானும் இந்த நற்கூலியைப் பெற விரும்புகிறேன். ஆனால் மிகவும் கடினமான நிலையாக இருக்கிறது.*

*இவ்வாறு ஒவ்வொருவரும் அந்த சுமையிலிருந்து விலகி விட முயற்சி செய்கிறார். ஆனால் நபித்தோழர்களிடம் இந்த விஷயம் இருந்ததில்லை. அவர்கள் வெருண்டோடவில்லை. மாறாக, மகிழ்ச்சியுடன் அந்த நற்கூலியைப் பெற முயற்சி செய்தனர். ஒரு சமுதாயத்தில் இந்த உணர்வு தோன்றி விட்டால், அது அனாதைகளையும் வறியோர்களையும் பராமரிக்கத் தொடங்கி விட்டால் அவர்களைப் பற்றிய கண்ணியம் சமுதாய மக்களின் உள்ளங்களில் உருவாகி விடும். (அனாதைகள், வறியோர்கள், விதவைகள் ஆகிய) அவர்களைப் பராமரிப்பதில் அவர்களுக்கு மன அமையும் நிம்மதியும் கிடைக்கும். அவர்கள் அனாதைகளை தமது பிள்ளையைப் போன்றே கருதுவார்கள். அப்போது அந்த சமுதாயம் ஈமான் இல்லாமலேயே வீரம் மிக்கதாகி விடுகின்றது. மேலும் அத்துடன் ஒருவருக்கு மரணத்திற்குப் பிறகுள்ள வாழ்வின் மீது ஈமானும் இருந்தால் உயிருள்ள இறைவன் மீது ஈமானும் இருந்தால் பிறகு இவ்விரண்டும் சேர்ந்து மரணத்தைப் பற்றிய அச்சம் அவருக்கு அருகில் கூட நெருங்க முடியாத அளவுக்கு அவருடைய உள்ளத்தை உறுதியாக்கி விடுகிறது.*

*ஐரோப்பிய சமுதாயங்களில் வீரம் காணப்படுகிற -தென்றால் அதற்கு ஒரு காரணம், நாம் மரணித்து விட்டால் நமது சமுதாயம் நமது அனாதைகளையும், விதவைகளையும் கவனித்துக் கொள்ளும் என்ற உணர்வு அவர்களிடம் காணப்படுகிறது. எனவேதான் மரணிப்பவர் கொஞ்சமும் பொருட்படுத்துவதில்லை. அவர் சென்று தனது உயிரைத் தியாகம் செய்து விடுகிறார். ஈமான் என்பது வேறாகும். அது அல்லாஹ்வின் நபியின் மீது புத்தம் புதிய ஈமான் கொள்வதற்கான நற்பேறு பெறுபவர்களுக்கே கிடைக்கின்றது. ஆனால் சமுதாய அளவில் இந்த வகையான உறுதித்தன்மை ஈமான் இல்லாமலும் சமுதாய நபர்களை தைரியசாலியாகவும் அச்சமற்றவர்களாகவும் ஆக்கி விடுகிறது.*

*(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 497-498 காதியான் பதிப்பு 2010)*

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad